13 Jan 1925

JL
211, N15A8
N25.107
187464

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 10 | இரக்தாட்சி௵ தை௴ ௧உ | 1925௵ ஜனவரி௴ 13உ | பகுதி 7

## கடவுள் வணக்கம்.

ஆராயும் வேளையிற் பிரமாதி யானாலு
மையவொரு செயலு மில்லை
யமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென விருந்த பேரும்
நேராக வொருகோப மொருவேளை வரவந்த
நிறைவொன்று மில்லா மலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துள றுவார்வசன
நிர்வாக ரென்ற பேரும்
பூராய மாயொன்று பேசுமிட மொன்றைப்
புலம்பு வார்சிவ ராத்திரிப்
போதுதுயி லோமென்ற விரதியரு மறிதுயிற்
போலே யிருந்து துயில்வார்
பாரகதி தனிலுள்ள செயலெலா முடிவிலே
பார்க்கினின் செயலல் லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே. (1)

187466

காட்டிய வந்தக் கரணமு மாயையிக் காயமென்று
சூட்டிய கோலமு நானு வியங்க துறையிதனுள்
நாட்டிய நான்றனக் கென்றோ றறிவற்ற நானிவற்றைக்
கூட்டினின் றூட்டினை யேபரமே நல்லகூத் திதுவே. (2)

பொல்லாத மாமர் கடமனமே யெனைப் போலடுத்த
யெல்லாவற் றையும்பற்றிக் கொண்டனை யேயென்னை நின்மயமா
நில்லாயருள் வெளிநீ நானிற் பேனரு ணிட்டையொரு
சொல்லாற் பதிந்துபரி பூரணா னந்தந்தோய் குவனே. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. ஆராயும் வேளையில்=ஆராய்ச்சிசெய்து பார்க்கும்போது.

பிரம்மாதியாளுலும் ஐய ஒரு செயலுமில்லை=பிரம்மாதி தேவர்கள் கூடத் தாங்களே செய்வது ஒன்றுமில்லை.

குணசந்த்ரர்=சந்திரன்போன்ற குளிர்ச்சிபொருந்திய குணமுடையோர்.

அந்த நிறைவு ஒன்றும் இல்லாமலே=தங்களுடைய சாந்த குணத்தை யிழந்தவர்களாய்.

வசனநிர்வாகர்=பேசுவதில் சமர்த்தர்கள்.

சிவராத்திரிப்போது துயிலோம் என்ற விரதியரும்=(மஹா சிவராத்திரி யன்று கண்ணுறங்காதிருப்பது விரதங்களிலெல்லாம் சிறந்த விரத மாதலின் அத்தகைய) சிவராத்திரியில் நித்திரை செய்யோம் என்று வைராக்கியம் கொண்டிருக்கும் விரதம்பூண்டோரும்.

அறிதுயில்=விழித்துக்கொண்டிருப்பது போலவே உறங்குதல்.

பாராதிதனில் உள்ள செயல் எலாம்=உலகத்தில் சீவர்கள் செய்யும் செயல் களனைத்தும்.

பார்க்கின்=ஆராய்ந்து பார்க்கின்.

"ஈசுவரனே எல்லாச் சீவர்களின் அறிவுக்கறிவாய் நின்று வினைப்பயன் படி ஆட்டிவைக்கிறான்; ஆதலின் ஆராய்ந்து பார்க்கின் பிரம்மா முதலாக எல்லாச் சீவர்களுக்கும் ஒரு செயலுமில்லை. எல்லாம் ஈசுவரன் செயலே" என்பது கருத்து.

(சீவர்கள் நான் என்ற அகங்காரத்தால் எல்லாச் செயல்களையும் தம் செயலாகக்கொண்டு நடப்பதால், பிறப்பிறப்பில் வருந்துகின்றனர். எல்லாம் அவன் செயல் என்ற உண்மையை யுணர்ந்து தற்செயலற்று சாட்சி மாத்திரமாய் நிற்கின் நற்கதியடையலாகும்.)

2. அந்தக்கரணமும் மாயை=மனம் முதலிய கரணங்களும் மாயையின் காரியமேயாகும்.

(மாயையின் தமோகுணத்திலுண்டான சூக்கும பஞ்சபூதங்களின் சத்துவகுண சமஷ்டியில் உற்பத்தியானவை அந்தக்கரணங்கள். அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் என்ற ஐந்துமாம்.

[illegible]ய கோலமும்=இந்தத் தேகம் என்று நாமம் சூட்டப் பட்ட உருவமும்.

நாளுவியங்கத்துறை=ப[illegible]விதமாய் இயங்கும் வழிகளையுடையது.

இதற்குள் நாட்டிய நா[illegible]=இத்தகைய தேகத்திற்குள் நாட்டிவைக்கப் பட்ட சீவன் என்[illegible] நானே.

([illegible] நான் எனில்)

சென்னை-600 008



தனக்கென்று ஓர் அறிவற்ற நான்=எனக்கெனச் சுதந்தரமான ஒரு அறிவு இல்லாத நான்.

(அதாவது நீ,யறிவித்தாலன்றி எதையும் நானே அறியக்கூடிய அறிவு இல்லாதவன் என்றபடி

"ஆட்டிவித்தா லார் ஒருவர் ஆடா தாரே
அறிவித்தால் யார் ஒருவர் அறியா தாரே
***காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணு தாரே
காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

என்றனர் அப்பர் சுவாமிகள்.)

இவற்றைக் கூட்டி நின்று ஆட்டினையே பரமே நல்ல கூத்து இதுவே=ஓ பரம்பொருளே! இத்தனுகரணமாதிகளைச் சீவனோடு கூட்டி நீ உள்ளுக் குள்ளே நின்று அவரவர் வினைவழியே ஆட்டிவைக்கின்றனையே, இது நல்ல நாடகமே.

3. பொல்லாத மாமர்க்கட மனமே=துஷ்டத்தனமுடைய பெரிய குரங்கு போன்ற மனமே.

(உப நிடதங்களில் மனம் மரத்தின் ஒரு கிளையை விட்டு மற்றொரு கிளைக்குச் சதா தாவிக்கொண்டே யிருக்கும் ஒரு குரங்கோடு ஒப்பிடப்பட் டிருக்கிறது.)

எல்லாவற்றையும் பற்றிக்கொண்டனையே என்னை=கண்டனவற்றை யெல் லாம் பற்றிக்கொண்டாயே இதென்ன ?

நின்மயமா நில்லாய்=உன் சுயவுருவமாய் நிலைத்து நில்.

(அது எது எனில்.)

அருள்வெளிநீ=நீ சிதாகாச உருவமே.

(மனதின் இராஜோ தமோ குணங்களொழிந்தால் அதன் சத்துவ குண மாகிய உள்ளம்மட்டுமாய் நிற்கும். அக்களங்கமற்ற உள்ளமே சிதாகாசம்.)

(நீயவ்வாறு நின்றால்.)

நான் அருள் நிட்டை ஒரு சொல்லால் பதிந்து நிற்பேன்=(பரமாசாரியர் உபதேசிக்கும்) ஒரு மொழியால் நான் ஞானநிட்டையில் நிலைபெறு வேன்.

மனம் சத்துவகுணமாத்திரமாய் ஒடுங்கிவிடின் திருவருளால் ஆன்ம தரிசனம் கிடைக்கப்பெற்று பிரம்மான்ம ஐக்கியமாகிய ஞான நிட்டை கூடும் என்பது இதன் கருத்து.

---

**சந்தாதாரர்களுக்கு**—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்து குறித்து வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

# ஆனந்தபோதினி

இரக்தாட்சி ஸு தை மீ ௧௨

## நம் நாடும் பத்திரிகைகளும்.

சகோதர சகோதரிகளே! கீழ் வரையப்படும் விஷயங்களை ஒவ்வொருவரும் தயவுசெய்து கவனம்வைத்து வாசித்து நன்குணரும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறோம்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளோடு நம் புண்ணிய நாட்டை ஒப்பிட்டுப்பார்த்தால் நம் நாட்டில் பத்திரிகைகள் மிகமிகக் குறைவென்றும், பத்திரிகைகளால் மற்ற நாடுகள் அடைந்திருக்கும் பயனை நம் நாடு கொஞ்சங்கூட அடையவில்லையென்றும் அங்கை நெல்லிபோல் விளங்கும். பத்திரிகாபிவிருத்தியாலேயே மற்ற நாடுகள் உலகில் முன்னேற்ற மடைந்திருக்கின்றன வென்பதைப் பற்றியும், ..த்திரிகைகளால் நாம் அடையக்கூடிய பயன்களைப்பற்றியும் ஆன்றோர்கள் பன்முறை அனேகம் பத்திரிகைகளில் வரைந்திருப்பினும் அவையாவும் "செவிடன் காதில் சங்கூதியது" போலும், தாடகைமேல் இராமர் விட்ட பாணம் போன்றும் நம்மவர் மனதிற் றங்காது போகின்றன.

"சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னண்மேல் விடுத்தலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்
[றே. (கம்பர் இராமாயணம்.)"

இப்போது மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டிற்கே பத்திரிகாபிவிர்த்தி அவசியமாய் அதிகம் வேண்டற்பாலது. ஏனெனில்,

1. நம் நாட்டில் கல்வி மிகக் குறைவு.



2. நம் நாட்டாரிற் பெரும்பாலர்க்கு நாம் முன்பு மிக்க உன்னதமான நிலையிலிருந்தோம், இப்போது கல்விச் செல்வம், பொருட்செல்வம், பலம், மதிப்பு யாவற்றையுமிழந்து யாவராலும் அலட்சியமாகக் கருதப்படும் மிக்க இழிவான நிலைமையிலிருக்கிறோம் என்கிற சங்கதியே தெரியாது.
3. பாமரர்களுக்கு நாம் அன்னியரால் இன்னவிதமாய் ஆளப்படுகிறோம், நாம் நமது சுயாதீனத்தை யிழந்து அடக்கியாளப்படும் நிலைமையிலிருக்கிறோம் என்ற விஷயமே தெரியாது.
4. கிராமவாசிகளுக்கோ மேற்கண்ட விஷயங்கள் அடியோடு தெரியாததுமன்றி, நம் க்ஷேமத்திற்கும் நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் நாம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், எந்த பண்டங்களை யுற்பத்திசெய்யவேண்டும் என்ற சங்கதியே தெரியாது.
5. கற்றோர் கல்லாதார் அனைவரிலும் பெரும்பாலார் நம் முன்னோரின் நாகரீகம் ஆசார ஒழுக்கங்கள் முதலியவற்றை அகௌரவமாகக் கருதி, அன்னிய நாகரீக மயக்கத்தில் சிக்கி நமக்குத் தகாத அன்னிய நாகரீக ஆசார ஒழுக்கங்களைக் கைப்பற்றி, அவற்றால் நேரிடும் தீங்குகளை யுணராதவர்களாய் இன்னும் தம் சந்ததியாரையும் அவ்வழியிற் பழக்குவிக்கிறார்கள்.
6. நம்மவரிடம் சுயநல நாட்டமே யதிகமாக விருக்கிறது. பொதுநலநோக்கம், தேசபக்தி, தாய்ப்பாஷையில் விசுவாசம், மதப்பற்று, பொதுநல விஷயங்களில் ஒற்றுமை, நாம் நம் பூர்வீக உன்னத நிலையை யடையவேண்டும் என்ற ஆவல், தாய்நாட்டிற்காக சுயநலத்தைத் தியாகம் செய்தல், முதலிய அவசியமாய் வேண்டிய குணங்கள் மிகக் குறைவாகவே யிருக்கின்றன.

மேற்கண்ட இக்குறைகளெல்லாம் நம் க்ஷேமத்திற்கும் நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெருந் தடைகளேயாகும். நாட்டில் பத்திரிகைகள் அதிகமாகப் பரவுவதால்தான் இக்குறைகள் ஒழியவேண்டும். ஏனெனில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் எவ்வாறு நடந்துகொண்டதால் மேலான நிலையை யடைந்தனவென்பதைப்பற்றியும், நாம் எவ்வாறு நடந்துகொண்டால்

முன்னேற்றமடையலாகும் என்பதைப்பற்றியும், நம்மிடமுள்ள குறைகளை யெவ்வாறு நீக்குவதென்பதைப்பற்றியும் ஆன்றோர்கள் பத்திரிகைகளின் மூலமாய் நமக்குப் போதிக்கிறார்கள். நாம் அவற்றை வாசித்துணர்ந்து அவ்வாறு நடந்துகொண்டால்தான் நாமும் நம் தாய்நாடும் க்ஷேமமடையலாகும்.

மற்ற நாடுகள் அவ்வாறு செய்தே மேலோங்கின. திருட்டாந்தமாய் நம் சென்னை இராஜதானியிலுள்ள ஐந்து ஜில்லாக்களின் அளவே ஏறக்குறைய இருக்கும் இங்கிலாந்தில் ஒரு லட்சம் முதல் நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட சந்தாதாரர்களையுடைய பத்திரிகைகள் அனேகம் இருக்கின்றன. மிகச் சிறிய தேசமாகிய ஜபானிலும் அவ்வாறே இலக்ஷக்கணக்கான சந்தாதாரர்களையுடைய பத்திரிகைகள் பல விருக்கின்றன. அந்தோ நம் நாட்டிலோ ஐம்பதினாயிரம் சந்தாதாரர்களையுடைய பத்திரிகை கூட ஒன்றேனுமில்லை. ஏனெனில், கூறுதும்.

1. இக்காலத்தில் தாய்ப் பாஷாபிமானம் மிகக் குறைந்துவிட்டது. யாவரும் ஆங்கிலக் கல்வியிலேயே ஆவலுடையவர்களாய்விட்டார்கள். ஏனெனில் சேவகாவிர்த்திக்கு இக்காலத்தில் ஆங்கிலக்கல்வியே முக்கியமாய் வேண்டியதா யிருக்கிறது. நம் நாட்டார் சுயாதீனத் தொழிலே கௌரவமான தொழில் என்ற உணர்ச்சியற்று, அடிமைத் தொழிலிலேயே ஆவல்கொண்டவர்களாய்விட்டார்கள்.

"அதமம் சேவகாவிர்த்தி" என்றும்,

"ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரம்—என்றாலும்
சாகாமல் கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவாம லுண்பதே யூண்"—(ஔவையார்)

என்றும் நம் ஆன்றோர் அருளிய வாக்குகளை யடியோடு அலக்ஷியம் செய்துவிட்டார்கள்.

இக்காரணத்தால் தாய்ப்பாஷையை யலட்சியம் செய்துவிட்டபடியால் அப்பாஷை நூல்களிலுள்ள நம் பூர்வீக உண்மை நிலைமை, நம் முன்னோர்களின் உன்னத நாகரீகம், கல்வி, பெருமை முதலியவைகளை யறிய வழியில்லாது போகிறது. இதனால் நாம் முன்னேற்றமடைந்து நம் பூர்வீக நிலைமையை யடையவேண்டு



மென்ற உணர்ச்சியில்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று காலங் கழிக்கிறார்கள்.

அந்த உணர்ச்சி யில்லாததால் பத்திரிகைகள் நமது முன்னேற்றத்திற்கு அத்தியாவசியம் என்பதை யுணர்ந்து அதை யாதரிக்கும் குணம் இவர்களிடமில்லை. இவ்வாறு அடிமைத் தொழிலே மிக்க கௌரவமென மதிமயக்கங்கொண்டு ஆங்கிலத்தைக் கற்றவர்களில சிலரை நீங்கள் ஏன் சஞ்சிகை வரவழைக்கவில்லை என்று யாரேனும் கேட்டால்,

(1) இவர்களில் சிலர் "தமிழில் எனக்கு விருப்பமில்லை. அதில் என்ன சுவை யிருக்கிறது?" என்று அன்னியபாஷையிலேயே பதில் கூறிவிடுகிறார்கள். அந்தோ இவர்கள் தம் செய்கை மாதுர் துரோகம் என்பதை யுணரவில்லைபோலும். தாய்ப் பாஷையை அவமதிக்கும் இவர்கள்—அப்பாஷையிலுள்ள, நம் பாரதநாட்டின் பூர்வீக நிலைமை, நம் முன்னோரின் இணையற்ற தெய்வீகத்தன்மை, அவர்களது ஞானம், அரிய செயல்கள், உலகிற்கே அவர்கள் செய்திருக்கும் என்று மழியாத உதவி, சத்தியமும் அழியாததுமான நமது மத உண்மைகள், இவைகளிலொன்றையு மறியாதவர்களாய் உலகாயதர்போல் உலகபோகத்தில் மட்டுமே நாட்டமுடையவர்களாய்க் காலத்தைக் கழிக்கிறார்கள். ஆனால் முடிவில் தென்புலத்தான் வருங்காலத்தில் இவர்கள் கதி என்னாகுமென்பதை யிதை வாசிப்போரே அறியவிடுகிறோம்.

(2) வேறு சிலர் "பத்திரிகை, சஞ்சிகை வாசிக்க எனக்கு அவகாசமில்லை" என்று கூறிவிடுகிறார்கள். இவர்கள் எந்த வழியிலேனும் பணம் சம்பாதிப்பதும், மேல்நாட்டாரைப்போல் வேடமணிவதும், கூடுமானால் அவர்கள் ஆசாரப்படி யுண்பதும் உறங்குவதுமே நாம் இச்சன்மத்தில் செய்யவேண்டிய தொழில்கள் என்று கருதியிருக்கிறார்கள்.

ஆண்டவன் நமக்கு எவ்வளவோ கருணையோடு இத் தநுகரணமாதிகளையும், பிறவிகளில் எல்லாம் உயர்வான மானிடப் பிறவியையும் அளித்தது எதற்காக என்ற உண்மையை யிவர்கள் அறியார்களா? இவர்களே தாய்ப்பாஷை நூல்களை வாசித்தறியாவிடினும் யாரேனும் கூறும்போதாவது கேட்டிரார்களா? ஆயினும் ஈசுர சிந்தனையற்றதும், இகத்திற்கும் பரத்திற்கும் உதவாததுமான இவர்கள் கற்றகல்வி இவர்களுக்கு மேல்நாட்டு நாகரீக

மயக்கத்தை யளித்து மேற்கண்ட உண்மை யிவர்கள் மனதில் நிலைக்காவண்ணம் செய்துவிட்டதே யுண்மை. இவர்கள் இப்படிப் பணம் சம்பாதிப்பதும் உண்பதும் உறங்குவதுமே வேலையென்று கருதி அவற்றிற்கே அறுபது நாழிகைகளையும் செலவழிப்பதாயின் இவர்களுக்கும் மிருகங்களுக்கும் பேதமென்னை? அவைகளும் அதே வேலைகளைச் செய்கின்றன.

ஆங்கிலம் படித்தவர்களிலும் சிலர் இயற்கையாகவே தாய்ப்பாஷையில் அபிமானமுள்ளவர்களா யிருக்கிறார்கள். இத்தகையோரும் தமிழ் வாசித்தோரில் சிலருமே பத்திரிகைகளை வாங்கி வாசிப்போர். இவர்களிலும் அநேகர் இன்னொருவருக்கு வரும் பத்திரிகையை இலவசமாய் இரவல்வாங்கி வாசித்தால் போதுமென்றிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலோர் பத்திரிகைகளை வாசிப்பதால் அவர்களுக்காவது நாட்டிற்காவது ஒருபயனுமில்லை. ஏனெனில் இவர்கள் பத்திரிகைகளை யொரு கதை படிப்பதுபோல் படித்துவிட்டு எறிந்துவிடுகிறார்களேயன்றி, நாம் முன்னேற்றமடைய என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி பத்திரிகைகளில் ஆன்றோர் கூறியுள்ளவாறு நடக்க முயல்வதே யில்லை. அவ்வாறு செய்யாதவரையில் நாம் பத்திரிகைகளா லடையத்தக்க பயனை அடையவேமாட்டோம். இதற்காக, நாம் ஐப்பசிமீ சஞ்சிகையில் "சற்சனசங்கம்" என்ற வியாசத்தின் குறிப்பில் வரைந்துள்ள விஷயங்களைக் கண்டு, சென்னை ஸ்பென்ஸர் கம்பெனியில் உதவி பொக்கிஷ இலிகிதராகவிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ வா. ஆ. ஜெயராம் முதலியாரவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் "சச்சிதாநந்த சத்சங்கம்" என்ற ஒரு சங்கத்தை இம்மதி பூச நக்ஷத்திரத்தன்று தாபிக்கக்கருதி அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகிறார் என்று அறிகிறோம். அவரது நல்லெண்ணம் ஈடேறி அச்சங்கம் நீடூழி நிலைத்து நற்பயனளிக்குமாறு அருள்செய்ய வேண்டுமாய்ச் சச்சிதாநந்தப் பரம்பொருளைப் பிரார்த்திக்கிறோம்.

நம் நாடு இப்போது ஏழ்மை நிலை யடைந்திருப்பது உண்மையே. ஆயினும் கல்வி கற்றோர்களனைவருமாவது குறைந்த சந்தாவுடைய ஒரு சஞ்சிகையையேனும் வாங்கக்கூடாத அத்தகைய தாழ்ந்த நிலைமையிலில்லை. நமது ஆனந்தபோதினிக்கு வருடம் ஒன்றுக்கு தபால்கூலி யுட்பட ஒரு ரூபாயே சந்தா. மாதம் 1-க்கு 1 அணா 4 பை ஆகிறது. இவ்வளவுகூடச் செலவழி



க்க வழியில்லாமலா இருக்கிறார்கள்? கூலிவேலைசெய்து சீவிப்பவன் கூட தினம் அல்லது வாரத்தில் இரண்டு மூன்று முறையேனும், பயாஸ்கோப, நாடகம் முதலியவற்றைப் பார்க்க ஒவ்வொரு முறையும் 4 அணா முதல் 2 ரூபா வரையில் செலவழிக்கமட்டும் பணம் இருக்கிறதா? அவற்றைப்போய்ப் பார்ப்பதால் நித்திரையைக் கெடுத்துக்கொண்டு தேகசுகத்தை யிழந்து மனச்சேட்டைகளை யுண்டாக்கிக்கொள்வதை யன்றி இவர்க ளடையும் நற்பயன் யாதுளது? இவர்கள் சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்தால் இந்த உண்மை விளங்காமற் போகுமா? நம்மவர் மதி இவ்வாறுகூடக் கேடுறுமோ! இது நம் தாய்நாடு செய்த பாபமா அல்லது இன்னும் நமது சந்ததியார்கூட முன்னேற்றமடைவது கடினமே என்பதன் அடையாளமா?

நேயர்களே! நாம் இவ்வாறு வரைவது நமது ஆனந்தபோதினிக்கே யாவரும் சந்தாதாரராய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற நோக்கம்கொண்டல்ல. யாவரும் பத்திரிகைகளாலடையும் பயனை யுணரவேண்டும், யாவரும் பத்திரிகைகளை வாசித்தறிந்து பயனடைய ஆவல்கொள்ளவேண்டும், வாசிக்க அறிந்த ஒவ்வொருவரும் ஒரு தாய்ப்பாஷைப் பத்திரிகையையோ சஞ்சிகையையோ வரவழைக்கவேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான கோரிக்கை. நம் நாட்டில் இருக்கும் தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மிகக்கொஞ்சம்; தமிழ் மக்களோ அதிகம். அப்படியிருந்தும் ஒன்றிற்கேனும் குறைந்தது அரை இலக்ஷம் சந்தாதாரர்கள்கூட இல்லாதிருப்பது தமிழராகிய நமக்கே வெட்கமன்றோ? நேயர்களே! இனியேனும் நம் புண்ணிய பூமியாகிய தாய்நாட்டின் க்ஷேமத்தையும் நம் மக்களின் க்ஷேமத்தையும் கருத்தில்வைத்து பத்திரிகைகளில் அபிமானம் கொண்டு நடவுங்கள். ஒவ்வொருவரும தயவுசெய்து இதைப்பற்றிச் சிந்தித்து, தனித்தனி வரவழைக்க மனமின்றேல் இருவர் சேர்ந்தேனும் ஒரு பத்திரிகையோ சஞ்சிகையோ வரவழையுங்கள். அதற்காகச் செலவழிக்கும் பணம், பயாஸ்கோப்புக்கும் நாடகத்திற்கும் செலவழிப்பதுபோல் வியர்த்தமல்ல, கெடுதியை யுண்டாக்கத்தக்கதுமல்ல வென்று அறியுங்கள். கருணாநிதியாகிய பரம்பொருள் நல்லருள்புரிவாராக.

ஓம்தத்ஸத்.

---

## தமிழர் விவாகச் சடங்கு.

நேயர்காள்!

விவாகம் என்பது இந்நில உலகில் மக்களாய்ப் பிறந்த ஆண், பெண் எனும் இருவரும் இல்லற தருமத்தை வழுவாது நடத்த நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓர் பஹிரங்க உடன்படிக்கையேயாகும். விவாகத்தால் தான் இல்லறத்தார் இகத்திற்கும், பரத்திற்கும் சாதனமான போகபாக்கியங்கள் அடையப்பெறுவர் என்பது மறைநவில் வழக்கு. ஆனதுபற்றியே இச்சடங்கினுக்கு, திருவிவாகம், வேட்டல், மன்றல், சுபம், மங்களம், திருமணம் எனும் பல மங்களகரமாய பெயர்கள் வழங்கப்படுகின்றன. நிற்க,

உலகில் எவ்விதம் இருளினால் ஒளியும், வெயிலினால் நிழலும், இரவினால் பகலும், சந்திரனால் சூரியனும் மேன்மை யடைகின்றனவோ அதுபோலவே பெண்களால் புருடரும் மேன்மை யடையவேண்டுமென்பது ஈசுவர ஆக்ஞை. அதை நாம் கடப்பது மரிதே. பெண்கள் உலகில் இல்லாவிட்டால் உலகின் அபிவிருத்தியே குறைந்து விடுமென்பது யான் சொல்லி நீவிர் அறியவேண்டிய தொன்றன்று. பெண்களில்லாவிட்டால் உலகமே நசித்துவிடுமென்பது வெளிப்படை.

இத்தகையதோர் பெண்ணும் அவள் தன் வாழ்க்கைத்துணைவனும் ஓர் ஆடவனும், இல்லறமென்னும் இயல்புடைய வான்சகடத்தை இழுக்கத் தொடங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட சடங்கே இவ்விவாகம் அல்லது மன்றல் எனப்படும். இச்சடங்கை, எச்சாதியினரும், எம்மதத்தினரும், எத்தேயத்தினரும், கையாண்டு வருகின்றனர் என்பது வெளிப்படை. இவ்விதம் சடங்கு ஒன்றும் நடத்தாமல், "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்பதொப்ப தம்தமிஷ்டப்படியே கூடிக் களிப்பார்களானால் அவர்கள் விலங்கினமாகவே கருதப்படுவர்.

இச்சடங்கை ஒவ்வொரு தேயத்தினரும், ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு ஜாதியினரும் அவரவர் அனுஷ்டானத்திற்கேற்ப நடத்திவருகின்றனர். சிலர் மாலை மாற்றிக்கொள்வர், சிலர் மோதிரம் மாற்றிக்கொள்வர், சிலர் துண்டு (சீலை) மாற்றிக்கொள்வர், இன்னுஞ் சிலர் பெண்ணிடமிருந்தும் ஆடவனிடமிருந்தும் சம்மதமெனச் சத்தியம் வாங்கிக்கொள்வர்.

இவை யெல்லாமோர்புறம் நிற்ப, நம் பண்டைக்காலத் தமிழர், என்? ஹிந்துக்கள் எல்லோருமே விவாகம் என்னும் ஓர் பெருஞ்சடங்கினை நடத்தி வருகின்றனர். அதில் ஏற்படுகிற பணச்செலவும் வீணாடம்பரங்களும் பலருமறிந்ததே எனினும் அதை யாராய யான் இப்பொழுது வந்தவனல்லனாகலின் அதை அறிஞர் ஆராய்ச்சிக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் இவ் வீணாடம்பரத்தையும் பணச்செலவையும் பிறர்பார்த்தே நம் மணவினைச் சடங்கை கேலிபண்ணுகின்றனர் என்பது மறுக்கற்பாலதன்று. இது நிற்க, அச்



சடங்கின் ஒவ்வொரு பாகத்தையும் உண்மையாயுணர்ந்தவரில்லை. உண்மையுணர்ந்தோர் எவரும் உண்மையறியாது எவ்விடயத்தையும் எளனம் செய்யார். நமது சடங்குகளனைத்தும் மதசம்பந்தமானவையும், ஆழ்ந்த கருத்துடையவையுமே யென்பதை அறிவாளிகள் நன்கறிவர்.

அறிஞர்காள்!

நம்மில் அநேகர், நமது மணவினைக்காலத்தில் நடத்தும் பெருஞ் சடங்குகளைப் பற்றியே யாராய்வதில்லை. இச்சடங்குகளெல்லாம் ஏன் செய்கிறார்கள்? என்று கவனித்தல்கூட, கவனித்துத் தெரிந்துகொள்ளாவிட்டாலும் விசாரித்தல்கூடச் செய்கிறதில்லை. நம்மானந்தனின் நண்பர்கள் அவ்விதம் இரார் என்றே எண்ணுகின்றேன். அவ்விதம் சிலரேனும் இருப்பார்களானால் அவர்களாவது இனிமேல் தெரிந்துகொள்ளட்டும் என்றே இவ்வியாசம் வரையப்புகுந்தேன். எல்லா மதத்தினருடைய சடங்குகளையும்பற்றி விவகரிக்கப் புகுந்தால் அது மிகைபடக் கூறல் என்னும் குற்றத்தின்பாற்படுமென அஞ்சி,அதை வாளாவிடுத்து, நம்மவர் யாவருக்கும் பொதுவான சில விடயங்களை மாத்திரம், விவகரிக்கப் புகுந்தேன்.

மணவினைச் சடங்கில், முதலாவதாகத், தத்துவக்கூடல் அல்லது சதுஷ்கூடமெனப்படும் சதுரமானதோர் பந்தலமைத்து, அதனுள் அமையும் எட்டுத்திசையிலும், முறைமுறையே அந்தந்தத் திக்குப்பாலகரை ஏதாவதோர் உபமானமுகத்தால் நிறுவுவர். கீழ்த்திசையில் கிளைவிளக்குவைப்பர். அத்திசையதிபனான தேவேந்திரன் ஆயிரங்கண் பெற்றவனானதாலே அவன்றன் ஆயிரங்கண்போன்று பல வெளிச்சம் தரும் கிளைவிளக்குகளை வைப்பர். தென்கிழ்த்திசையில் அத்திக்குப்பாலகனான அக்னியை நிறுத்த வேண்டி குடவிளக்கை மர உரலின்மீது ஏற்றித் தையிலையால் மறைப்புக் கட்டிவைப்பர். தென்திசையில், தென்திசையோனான இயமன் பாவ புண்ணியத்தை நிர்வஹித்து அதற்கேற்ப சுவர்க்க நரகங்களைத் தருபவனாதலால் அவன்போன்று பாபத்திற்குப் பிராயச்சித்தமும் புண்ணியத்திற்கு ஆசீர்வாதமும் தருகின்ற புரோகிதரை அல்லது அந்தணரை வைப்பர். தென்மேற்குத் திசையில், இராக்ஷதத்தலைவனான நிருதியின் அறிகுறியாய் பாப கர்மங்கள் புரியும் தாசியை வைப்பர். மேல் திசையில் மழைபொழிந்து உலகைச் க்ஷேமமடையச் செய்யும் வருணன்போன்று "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நிற்கும்" துணைவன் துணைவியாய் இல்லற தருமத்தை நடத்தப்போகும் மணமகனையும், மணமகளையும் வைப்பர். வடமேற்கு திசையில் வாயுவின் பிரதிரூபமாய் மாப்பிள்ளைத்தோழன் ஒருவன் கையில் விசிறியேந்தி மணமகனுக்குக் காற்றுவரப் பண்ணிக்கொண்டிருக்கும்படி வைப்பர். வடதிசையில் நவநிதியம்படைத்த குபேரனொத்து மணமக்களின் உறவோனொருவன் கையிற் [illegible] சடங்கினுக்கு வேண்டும் நாணயங்களைக் [illegible] வருவன். [illegible] திசையில் ஈசானனை நிறுவவேண்டி [illegible]யும் குழவியும் வைப்பர். இத்[illegible]ய உப

18766.

மான முகத்தால் உபமேயங்களாகிய திக்குபாலகர்கள் விளக்கப்படுவர். இவர்களெல்லாம் சாட்சியாக முடிக்கும் மணமே தெய்வசாட்சியாக முடிவு பெற்ற மணமாகும். இக்காரணத்தைக்கொண்டே இந்துக்கள் முடிக்கும் மணம் தெய்வசாட்சி பெற்றது எனக் கூறுவர்.

இனி மணவினை யாரம்பித்ததும், முதலில் மணமகன் மணமகளிருவருக்கும், கங்கணங்கட்டுவர். இதன் நோக்கமாவது, மணமகள் கன்னிகையாயிருந்து பரிபக்குவமடைந்தபொழுது (அதாவது எட்டாவது வயது முதல்) இருந்து முதலில் காந்தர்வனும், இரண்டாவது அக்கினிபகவானும், மூன்றாவது சோமனும் அவடன் கணவராயிருந்து இன்பம் நுகர்வர் என்பது புராதனக் கொள்கை. அக்கன்னியை கன்னிமைக்காப்பில் நின்றும், அத்தேவர்கள் மூவரினின்றும் விடுவித்தற்பொருட்டுக் கட்டப்படும் இரக்ஷாபந்தனம் போன்றதே கங்கணங் கட்டுதலாகும்.

இதன்பிறகு மணமக்களைப் பாதித்துள்ள, அல்லது பாதிக்கக்கூடிய நவக்கிரஹ தோஷத்தினின்றும் நீக்குதற்பொருட்டு நவதானியங்களை முளைக்கச்செய்து, மணமுடிந்தபின்னர் ஏழாவது நாளில் நதியில் கொண்டுவிட்டு நவக்கிரகதோஷத்தினின்றும் நீக்கிக்கொள்வர். பின்னர் சப்த நதிகள் அல்லது எழுவகைக் கடலிலுள்ள தீர்த்தத்திலும் மணமக்கள் நீராடவேண்டுமென்ற குறிப்பினை யுட்கொண்டே சிவாலயம், விஷ்ணு ஆலயம், பிராமணர் அகம், பசுத்தொழுவம், நந்தவனம், நதி, நதம் முதலியவைகளினின்றும் கொண்டுவந்த தீர்த்தத்தை மணமக்களின்மேல் புரோகிதர் புரோக்ஷிப்பர்.

பின்னர் பிரம விஷ்ணு ருத்திரர்களை நிகர்க்கும், ஆல், அரசு, கல்யாண முருக்கு எனும் மூவகை மரத்தின் கொம்புகளையும் ஓர் கம்பத்தில் கட்டி, சரஸ்வதி, இலக்குமி, பார்வதியை நிகர்க்கும் மூன்று மங்கிலியப் பெண்டுகளைக்கொண்டு தென்மேற்கு திசையில் உள்ள பந்தல் கம்பத்தின் பக்கத்தில் நாட்டிவைப்பர். அம்மணமக்கள் ஆல்போல் தழைத்து அரசுபோல் வேரோடி முருங்கைபோல் பூப்பூத்து, குடி யோங்கிவாழவேண்டுமென்று விரும்பியே இச்சடங்கைச் செய்கின்றனர்போலும்.

இத்தகைய முகூர்த்தங்கள் நடந்தபின்னரே மங்கலநாண்பூட்டுச் சடங்கு நடைபெறும். மணமகன் தன்னுயிரையே மணமகளுயிருடன் ஒன்றுறப் பிணிப்பான்போன்று மங்கலநாணை மணமகள் கழுத்தில் கட்டுவன். மாங்கில்யத்தை மஞ்சட் கயிற்றிற் கோத்துக் கட்டவேண்டுமென்பது மறைநவில் வழக்கு. அந்நாணின் முதல் முடிச்சுப் போடுங்கால் பிரம்மமந்திரத்தையும், இரண்டாவது முடிச்சில் விஷ்ணு மந்திரத்தையும், மூன்றாவது முடிச்சில் ருத்திர மந்திரத்தையும் ஓதவேண்டும். அதன்பின்னர் மணமகளின் பிதா தனக்கும் தன் மகளுக்கும் இனிமேல் யாதொரு பாத்தியமும் கிடையாதென்றும் அவள் தன் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவள் தன் கணவனே கர்த்தன் என்வுங் கூறித் தன் மகளைத் தாரைவார்த்துக் கொடுப்பன்.



இதனையடுத்து மணமகன், மணமகளை யழைத்துச் சென்று அம்மியை மிதிக்கச்சொல்லிக் கற்புத் தவறிய அகலிகையின் கீழ்மையையும், சப்தரிஷிகளின் நக்ஷத்திரத்தை யடுத்த அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டி கற்பின் திண்மையை விளக்கிய அருந்ததியின் மேன்மையையும் விளக்குவன். இதன்பின்னர் நடத்தப்பெறும் நலுங்கு, ஊசல், மலர்ச்செண்டடித்தல், மஞ்சள் நீராடல் முதலியவெல்லாம் மணமகனுக்குப் பெண்களின் ஸ்பரிச உணர்ச்சியின் தன்மையைக் காட்டும் சடங்குகளேயாதலால் யான் அதைக் கவனிக்கப் புகுந்தேனில்லை.

கடைசியாக மணமக்களை நகர்வலஞ் செய்வித்தல் மணமகன் மணமகளை உரிமைகொண்ட விடயத்தை உலகுக்கு அறிவிக்கவேண்டி நடத்தப்பெறும் ஓர் ஆடம்பரமேயாகும். பின்னர் கங்கண விசர்ஜனம் என்னும் விழா நடைபெறும்.

இத்தன்மையான சடங்குகள் இன்றைக்கும், தமிழ்நாட்டினர் பலர் வீட்டிலும் நடைபெற்று வருகின்றது. ஆனால் எத்தனைபேர் அதனதன் உண்மைத் தாத்பரியங்களை அறிந்திருப்பர் என்பதைமட்டும் யாமறியோம். பலர் அறியார் என்பதுமாத்திரம் உண்மை. ஆதலினாலே இவ்விடயம் எழுதப் புகுந்தோம். குற்றங் காணின் பொறுக்க. சுபம்.

தோ. மு. பாஸ்கரன்,
“ சித்திராலயம் ” திருநெல்வேலி.

---

## தற்கால கற்புக்கரசியின் உண்மைச் சரிதை.

‘ அமிர்தபஜார் ’ பத்திரிகையில் கீழ்க்கண்ட வியக்கத்தக்க விபரம் வெளியிடப்பட் டிருக்கின்றது:—கோபால்கான்ஜ் சப் டிவிஷனைச் சேர்ந்த ஹாஜியபூர் கோத்ரியாவில் வசித்துவந்த ஸ்ரீ ஜத்பாபன்சிங் என்பவர் சில காலமாக தேக அசௌக்கியமா யிருந்தார். அப்பிணியாளர் படுத்திருந்த படுக்கைக் கருகிலுள்ள சுவரில் ஒரு சிறு துவாரமிருந்தது. ஒருநாள் ஸ்ரீ ஜத் பாபன்சிங் தம்மருகிலிருப்பவர்களை அச்சிறு துவாரத்தை அடைத்து விடும்படியும் இன்றேல் அதன் வழியாகப் பாம்பொன்று வந்து தம்மைக் கடித்துக் கொன்றுவிடுமென்றுங் கூறினார். அவர்கள் அவர் கூறியதை நோயின் கொடுமையால் பித்தம் பிடித்தவர் போல் உளறுகின்றார் எனக் கருதி அலட்சியஞ்செய்து விட்டமையால் அந்தத் துவாரம் அடைக்கப் படாமலே இருந்தது. ஆனால் பின்னர் எப்படியோ ஆச்சரியப்படத்தக்க வாறாக பாம்பொன்று அந்தச்சிறு துவாரத்தின் வழியே உட்பிரவேசித்து அவரைக் கடித்துவிட்டது. பாபன்பாபு அப்பாம்பைச் சின்னபின்னமாகக் கிழித்தெறிந்து விட்டாரெனினும் விஷந்தலைக்கேறி மறுநாட் காலை மரணமடைந்தார். அவருடைய பத்தினி அவரிடம் அளவற்ற அன்புகொண்டிருந்தார். அவர் வாஸ்தவமான சுயநலங்கருதாத ஒத்துழையாதாராகவிருந்தார். ஸ்ரீ ஜத் பாபன்சிங்கின் பிரேதம் தகனஞ் செய்யப்படுவதன்

பொருட்டு மயானத்துக்குக் கொண்டுபோகப் படுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது அவருடைய தர்மபத்தினி தமது கண்களில் ஒரு துளி கண்ணீருமின்றி, தமது கணவனின் தலையைத் தன் மடிமீது வைத்துத் தம்மையும் அவருடன் சேர்த்துத் தகனஞ் செய்துவிடும்படி வேண்டிக்கொண்டார். பின்னர் அவர் தமது கணவரின் பிரேதத்தை விட்டு அப்புறஞ் செல்ல மறுத்து விட்டமையால் பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோவதற்கு முன்பே அவ்வம்மையைப் பலாத்காரமாய் ஒரு அறையிற்றள்ளிப் பூட்டிவைக்கவேண்டுவதாயிற்று. மயானத்திலோ எவ்வளவு முயற்சி செய்யப்பட்டபோதிலும் அப்பிரேதம் பாதிக்குமேல் வேகவில்லை.

ஆயினும் கடந்த வாரம் அக்கற்புக்கரசி தம்மிடமிருந்த ரூபா 700 ஐயும், மற்றும் கதர்த்துணிகளையும் பிராமணர்களுக்கு தானம் செய்தார். இவ்வம்மை இந்தச் சாமான்களுக்கருகே கடிதமொன்றெழுதி வைத்துவிட்டுக் கையில் இராமாயணமேந்தி தர்ப்பாசனத்தின் மீது உட்கார்ந்தார். உடனே அவருடைய கால்முதல் மார்புக்கு மேல் சிறிதுபாகம் வரை எரிந்து சாம்பலாகிவிட்டது. அவருடைய உடலில் பாதி எரிந்து சாம்பலாகி விட்டபோதிலுங் கூட அவ்வம்மை உட்கார்ந்த நிலையிலேயே இருக்கக்காணப்பட்டார். அவருடைய கைகளில் ஒன்று அவருடைய மோவாய்க் கட்டையைத் தாங்கிக்கொண்டிருந்தது. அவர் வீற்றிருந்த தர்ப்பாசனமும் அருகில் பூமியில் விழுந்துகிடந்த ஸ்ரீ ராமாயணமும் சிறிதும் நெருப்பால் பாதிக்கப் படவே யில்லை. மேலும் அவருடைய முகம் புன்னகை பூத்திருக்கக் காணப்பட்டது. இதனைக் கேள்விப்பட்டு அநேக வக்கீல்களும், மோக்தார்களும், பானியர்களும் கோபாலகான்ஜூக்குச் சுமார் ஒருமைல் தூரத்திற்குள்ளாகவே இருக்கும் அவ்விடத்திற்குப் பெருந்திரளாக விரைந்து சென்று அவ்வற்புதக்காட்சியைத் தமது கண்ணாரக் கண்டனர். முடிவில் தீக்கிரையாகாமலிருந்த அவ்வம்மையின் உடலின் மேல் பாகம் "ஸ்ரீ காளிஜீ" யின் முன்பாகக் கொண்டுபோகப்பட்டு அவருடைய கணவனின் உடல் எரிக்கப்பட்ட சாம்பலைக் கொண்டுவந்து அவ்வம்மையின் மீது தெளித்த உடனே அவ்வம்மையின் உடலிலிருந்து மீண்டும் தானுகவே தீ வெளிப்பட்டு அவ்வுடலையும் எரித்துச் சாம்பலாக்கியது. இக்காட்சி சம்பவம் பல ஆயிரக்கணக்கான ஜனங்களால் பார்க்கப்பட்டது. இதனால் நாம் இந்திய மாதர்க்கரசிக்குப் பெரும்புகழுண்டாகவென வாழ்த்த வேண்டாமா? இக்குடும்பத்திற்கே இவ்வம்மைதான் ஒரே ஒருமாதென்பதும் குறிப்பிடத்தக்கது. —"திராவிடன்."

குறிப்பு:—நம் புண்ணிய பூமியில் கற்பரசிகள் இன்னும் இருக்கிறார்கள் என்பதை நம் மாதர் உணர்ந்து அனுசாரங்களாகிய அன்னியநாட்டு ஆசாரங்களைக் கைக்கொள்ளாமல் ஒவ்வொருவரும் கற்பின் பயனை யடைய முயலவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். பத்திரிகாசிரியர்.

## ஔவைப் பிராட்டியாரையும் திருத்த முன் வந்து விட்டார்களா?

இந்திய கிறிஸ்தவ கல்வி விர்த்திச் சங்கத்தார் உத்தரவின்படி பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து உரையுடன் அச்சியற்றி வெளியிடப்பட்ட "நீதி நூற்றிரட்டு" என்னும் அரிய பெயர்வாய்ந்த ஓர் புத்தகத்தை எனது கிறிஸ்தவ நண்பரொருவர் வைத்திருக்க அதனை யான் அவரிடமிருந்து பெற்றுத் தற்செயலாகப் பார்வையிட்டபோது ஔவைப்பிராட்டியார் அருளிச்செய்த ஆத்திசூடி நீதிவாக்கியங்களில் எட்டும், மூதுரை வெண்பாக்களில் ஆறும், நல்வழி நாற்பதில் இருபத்தொன்றும், சிவப்பிரகாசர் இயற்றிய நன்னெறி நாற்பதில் பதினைந்தும், குமரகுருபரர் இயற்றிய நீதிநெறிவிளக்கத்தில் இருபத்தெட்டும், அதிவீரராம பாண்டியன் இயற்றிய வெற்றிவேற்கையில் ஆறும் ஷை சங்கத்தாருடைய உத்தரவின்படி நீக்கியிருக்கக் கண்டேன்.

பண்டைக்காலத்துப் புலவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நீதிவாக்கியங்களைத் திருத்தவும் சிலவற்றை நீக்கி அச்சியற்றவும் உத்தரவிட்ட மேற்படி சங்கத்தார் அத்தத்துவத்தை யாரிடமிருந்து பெற்றாரோ யாமறியோம்! கிறிஸ்தவ கல்வி விர்த்திச்சங்கத்தார் தமிழ் நூல்களைத் திருத்தி யச்சியற்ற முன் வந்தமை என்ன துணிவு என்ன அகம்பாவம்! கிறிஸ்தவ கல்வியை விருத்தி பண்ணுதற்கு இவர்கள் தமிழ் நூல்களை—ஔவை, சிவப்பிரகாசர், குமரகுருபரர், அதிவீரராம பாண்டியன் முதலிய பண்டை நாட் புலவர் அருளிச்செய்த நூல்களை—எதற்காகத் திருத்தவேண்டும்? அங்ஙனம் நீக்கப்பெற்றவை ஆக்ஷேபனைக் கிடமாயிருத்தலால் அவற்றை ஷை சங்கத்தார் நீக்கிவிட்டார்களாம். யாருடைய ஆக்ஷேபனைக்கிடமாயிருந்தன? இருக்கின்றன? ஆறுமுக நாவலரின் ஆக்ஷேபனைக்கிடமாயிருந்தனவா? மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்களின் ஆக்ஷேபனைக்கிடமா யிருந்தனவா? மதுரைத் தமிழ்ச் சங்கத்து முன்னை நாட் புலவர் தம் ஆக்ஷேபனைக்கிடமாயிருந்தனவா? பின்னை நாட் புலவர் தம் ஆக்ஷேபனைக்கிடமா யிருந்தனவா? இற்றை நாட் புலவர் தம் ஆக்ஷேபனைக் கிடமாயிருக்கின்றனவா? பின்னர் எவருடைய ஆக்ஷேபனைக் கிடமாயிருந்தன? இருக்கின்றன?

கிறிஸ்தவ கல்வி விர்த்திச் சங்கத்தாரின் புலவர் தம் ஆக்ஷேபனைக் கிடமாயிருந்தனவோ? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" "தாயைச் சிறந்தொரு கோயிலுமில்லை" "தேசத்தோடொத்துவாழ்" என்னும் பொன்னனைய நீதிவாக்கியங்களின் அருமை பெருமையையும் அவற்றின் ஆழ்ந்த கருத்துக்களையும் ஆய்ந்தறியும் ஆற்றலற்றவர்தம் ஆக்ஷேபனையை அங்கீகரித்த சங்கத்தாரின் மதிதானென்னே! குறித்த நீதிவாக்கியங்கள், ஆக்ஷேபனைக்கிட முள்ளவை யெனக்கண்ட கிறிஸ்தவக் கல்வி விர்த்திச் சங்கப் புலவர் தமக்கும் வயிறு வளர்க்கும் பொருட்டு புறமதம் புகுந்தபோலிப்பண்டிதர்கட்கும் யாதேனும் சம்பந்தமுண்டா! விரிக்கிற்

பெருகும். சமயகண்டனஞ் செய்யமாட்டேன் என்னும் விரதம் பூண்டிருத்தலால் இத்துடன் விடுத்தேன்.

தமிழ்மக்களுடைய நாகரிகத்திற்கும் அவர் தம் சமயத்திற்கும் ஒப்பப் பண்டைக்காலத்துப் புலவர் திருவாய் மலர்ந்த உபதேச மொழிகளை நேற்றுவந்த சங்கத்தார் திருத்துவதும் அவற்றுள் சிலவற்றை நீக்கி அச்சியற்றி வெளி யிடுவதும் அடாத செய்கைகளாகும். கிறிஸ்தவக் கல்வியை விருத்திபண்ணும் ஒரு சங்கத்தார் தமிழ்க் கல்வியோடு சருவுவதேனோ? தமிழ் கிறிஸ்தவ பாஷையன்று. அன்றியும் கிறிஸ்தவக் கல்வியென்று புறம்பான ஓர் கல்வியிருக்கின்றதோ? கல்வி பாஷையை ஆதாரமாகக் கொண்டுளது; சமயத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை. கிறிஸ்தவ சமயக்கல்வியை விருத்தி பண்ணுதற்கு கிறிஸ்தவ பாஷை நூல்களையே கைக்கொள்ளல் வேண்டும்.

உண்மைத் தமிழ் மக்கள் சைவராயினும், கிறிஸ்தவராயினும் ஷை புத்தகத்தைப் பாடசாலைகளிலாவது தமது இல்லங்களிலாவது உபயோகிக்க ஒருப்படார் என்று நம்புகின்றேன். கிறிஸ்தவராயுள்ள நம்சகோதர சகோதரிகள் தாங்கள் தமிழர் என்பதை மறந்துபோக வொண்ணாது.

“ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.”

எனவும் இன்னும் பலவாறாகவும் சி. சு. பாரதியார் பாடியிருக்க, கிறிஸ்தவக் கல்வியை அபிவிருத்தி பண்ணும் ஒரு சங்கத்தார் நம் பழந் தமிழ் நூல்களிலுள்ள வாக்கியங்கள் சிலவற்றை அழித்துவிட முயற்சி செய்து வருகின்றார். ஆதலால் தமிழபிமானிகள் ஷை சங்கத்தாருக்குப் புத்தி புகட்டுவாராக.

து. விஜயரத்தினம்.

குறிப்பு:—நேயர்களே! மேற்கண்ட விஷயத்திலுள்ள அடாத செய்கையைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. நம் முன்னோர்களின் மேலேகுறித்த நூல்களனைத்தும் மத சம்பந்தமானவை. அன்னிய மதத்தவர் அதிலும் ஹிந்து மதத்தை யழிக்க எண்ணுவோர் அவற்றைத் திருத்தியும் குறைத்தும் அச்சியற்றுவது அடாதசெய்கையே. அதைத் தடுக்க முயல்வதோடு நமது மக்கள் பாடசாலைகளிலேனும் சரி, வீட்டிலேனும் சரி அப்பதிப்புகளை வாசிக்கும்படி விடாமல் பெற்றோர் திடமான முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். நம் மக்கள் வாசிக்கும் பாடசாலைகளில் அவற்றைப் பாட புத்தகமாக வைக்கலாகாதென்பதைப்பற்றி தக்க முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம். **பத்திரிகாசிரியர்.**

## ஞானமும் ஞானமார்க்கமும்

மாந்தர்க்கு இன்றியமையாததிலு மின்றியமையாதது ஞானமே. அதனிலும் மேலானது ஒன்றுமில்லை. ஏனெனில் இம்மை மறுமை என்னு மிருமையிலும் மனிதனுக்குக் கீர்த்தியையும் ஆனந்தத்தையும் ஈவது ஞானமே.

‘ இந்திரியக் குஞ்சரத்தை ஞானப்பெருங்கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே—பந்திப்பர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத் துவர் ’

என்னும் அறநெறிச்சாரப் பாடலு மிப்பொருள் படைத்ததே. ‘முத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே’ என்பது திருமூலர் வாக்கு. மேலும், நம் மாசார்ய சுவாமிகளின், சங்கராசாரியரின், சீடர்களில் ஒருவராகிய வார்த்திகக்காரரும் அவ்வாறே யருளியிருக்கின்றனர்.

இப்போது ஞானமென்பது என்ன? அதை எப்படி அடைவது? அப்படி அதை அடைவதனாலுண்டாகும் முக்கிய பலனென்ன? என்னும் கேள்விகள் மனதிற் பிறக்கும். அவைகளை ஒவ்வொன்றாய் விசாரிப்பாம்.

**தத்வத்தை அறிவதே ஞானம்.**

எது ஸத்யமாயிருப்பதோ, உண்மையோ, யதார்த்தமோ அதுதான் தத்வம்.

சுருதி முதலிய வேதவாக்கியங்கள் தத்வத்தைப் பின்வருமாறு விவரிக்கின்றன:—

‘ தேகாதிப் பிரபஞ்சமனைத்தும் மித்தை, மாயாசங்கற்பிதம்; கானலில் ஜலம் தோற்றுவதுபோலும், கிளிஞ்சலில் வெள்ளி தோற்றுவதுபோலும், பழுதையிற் பாம்பு தோன்றுவதுபோலும், கட்டையிற் கள்ளன் தோன்றுவதுபோலும்; மதிமயக்கத்தாலேற்பட்ட பொய்த்தோற்றம்; அஞ்ஞானாந்தகாரத்தில் அவித்தையாலேற்பட்ட மோகமென்னும் நித்திரையிற் றோன்றும் சொப்பனம். சாதாரண சொப்பனம் விழித்தபின் பொய்யாவது போல, ஞானோதயமானதும் பிரபஞ்சம் அஸத்தென்று நிரூபிக்கப்படும். வியவகாரிக தசையில் மெய்போற் றோற்றினாலும், பாரமார்த்திக தசையிற் பொய்யேயாகும்.

ஸத்யமாகவுள்ளது எதுவென்றால்:—ஸர்வாதீதமாய், பரிபூரணமாய், சச்சிதானந்த நித்ய நிர்மல சுத்தசைதன்யமாய், ஸர்வஸாக்ஷிமமாய், நிர்க்குணமாய், நிரஞ்சனமாய், கைவல்யமாய், த்ரிகுணரஹிதமாய், அவஸ்தாத்ரயசாக்ஷியாய், பஞ்சகோசவிலக்ஷணமாய், அவ்யயமாய், பரமானந்த ஞான வடிவமாய், அத்வைதமாய், பரமாத்மாவாய் விளங்கும் ப்ரம்மமே ஸத்யம்.

பரம முக்யமாயும் பரம சிரேஷ்டமாயுமுள்ள இந்த ஞானத்தை யடைவதற்கேற்பட்ட படிகளை இப்பொழுது ஒவ்வொன்றாக விசாரிப்பாம்.

**ஸத்ஸங்கம்** செய்தலே முதற்படி. ஸத்ஸங்கத்தில் விசேஷ பலன் இருக்கிறது. ஸத்ஸங்கமானது மனதை மேன்மேலும் ஸத்விஷயத்திலேயே பிரவர்த்திக்கச் செய்கிறது. தீய சேர்க்கையானது மனதைத் தீயவழியில் செலுத்துகிறது. ஸத்ஸங்கம் ஈற்றில் பரம சுகத்தைக் கொடுக்கின்றது. துர்ச்சங்கத்தின் பலன் துக்கமே. ஆகவே முதல்முதல் அதி ஜாக்ரதையாய் தீயகூட்டத்தை விலக்கி ஸாதுக்கள் ஸங்கத்தை அடையவேண்டும். அப்படிச் செய்வதனால் மற்றெல்லாப் பேறுகளும் ஒவ்வொன்றாகத் தானே சித்திக்கும்.

'சம்சாரமென்னும் சாகரத்தைக் கடக்க ஸத்ஸங்கம் ஒன்றுதான் ஓடமாகவிருக்கிறது' என்று ஆசாரிய சுவாமிகளின் சீடர்களில் ஒருவராகிய பத்மபாதர் கூறினர்.

'நல்லோரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லோர் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லோர் குணங்க ளுரைப்பதுவும் நன்றே
அவரோ டிணங்கி யிருப்பதுவும் நன்று'

என்னும் தமிழ்ப்பாவை பாலியத்திலேயே படித்திருக்கின்றோமல்லவா?

ஆசார்யஸ்வாமிகளுடைய ஆப்த வாக்கியமே யிதற்குப் பிரமாணம். அதே அவருடைய கட்டளை. ஆதலால் ஸத்சங்கம் செய்தல் பரம முக்கியம். அதுவே மோக்ஷத்தை அடைவிக்கக்கூடிய ஞானமார்க்கத்தில் முதல் படி.

**நிஷ்காமகர்மம்** செய்தல் இரண்டாவதுபடி. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குத் திரும்பவும் திரும்பவும் போதிக்கும் ஞானோபதேசங்களின் சாரம் இதுவே.

நிஷ்காமகர்மமாவது சத்கர்மங்களைச் சதா செய்துகொண்டு அவைகளின் பலன்களை ஈசுரார்ப்பணம் செய்தல். பலனை யபேக்ஷியாமல் கர்மஞ் செய்யவேண்டும். சந்நியாசமென்பது உண்மையில் கர்மத்தின் பலனைத் தியாகம் செய்வதேயொழிய, கர்மத்தை விடுதலன்று. இப்படி நிஷ்காம கர்மங்கள் செய்யும்போது அவைகளை, 'நானேசெய்கிறேன்' என்னும் அகங்காரமொழிந்து, நிரகங்காரியாய் செய்யவேண்டும். 'சகலமும் ஈசன் செயலே' என்னும் எண்ணமே மேலிட்டிருக்கவேண்டும். நிஷ்காம கர்மத்தின் பலன் என்னவென்றால் நாளடைவிற் சித்தசுத்தியுண்டாகும். சித்தசுத்தித்வாரா ஞானம் சித்திக்கும். பகவான் அர்ஜுனனுக்கு சொன்னதாவது:—"கருமஞ்செய்யத் தேவையில்லாத மஹாபுருஷர்கள்கூட வெகு காலம் நிஷ்காமகர்மங்களைச் செய்தே தங்கள் உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறார்கள். அப்படி அடைந்தபின்பும் கூட லோகோபகாரமாக நிஷ்



காமகருமங்களைச் செய்து வருகிறார்கள். அப்படியிருக்க ஏ பார்த்த! அந்த உயர்ந்த ஞானத்தை யடையாதவனும் பேதபுத்தியுள்ளவனும் உள்ள நீ எப்படி நிஷ்காமகர்மஞ் செய்யாமலிருக்கக்கூடும்? அகததியம் செய்தே தீரவேண்டும்" என்று அருளிச்செய்தார். ஆதலால் நிஷ்காம கர்மம்புரிதல் அத்யாவசியம். இது மோக்ஷமார்க்கத்தில் இரண்டாவதுபடி.

**இராகாதிகுணங்களைச் செயித்தல்** மூன்றாவது படியாக விருக்கிறது. ஞானம் சித்திக்கும்பொருட்டு முக்யமாய் நீக்கத்தக்க குணங்கள் பதின்மூன்று.

அவை: 1. இராகம், 2. துவேஷம், 3. காமம், 4. குரோதம், 5. உலோபம், 6. மோஹம், 7. மதம், 8. மச்சரம், 9. ஈரிஷை, 10. அசூயை, 11. டம்பம், 12. தர்ப்பம், 13. அகங்காரம் என்பனவாம். இவை ஒவ்வொன்றையும் மனிதன் அவசியம் அப்பியாசத்தில் மெள்ளமெள்ள நீக்கிவிடவேண்டும். ஏனெனில், இவைகளில் ஒவ்வொன்றுமே மனிதனைத் துக்கசாகரத்தில் அமிழ்த்தி இவ்வுலகில் பழிப்பையும் மறு உலகில் நரகையும் உண்டாக்கக் கூடிய சக்தியுடைத்தானதாகவிருக்கிறது. மேலும் பூர்வத்தில் அப்படி இவைகளிலொவ்வொரு குணத்தினால் அநேகம்பேர் நாசமும் நரகமும் அடைந்ததாக நூல்களின் மூலமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்க, இவைகளெல்லாம் ஒருங்குகூடி ஒருவனிடம் குடிகொண்டால், அந்த மனிதன் கதியென்னவாகும்? ஆதலால் இப்பதின்மூன்று குணங்களையும் விலக்குதலே மூன்றாவது படி.

**சாதன சதுஷ்டய சம்பத்தி** பெறல் நான்காவது படி, 1. நித்யாநித்ய வஸ்து விவேகம், 2. இகமுத்திரார்த்த பல போகவிராகம், 3. சமாதிஷட்க சம்பத்தி, 4. முமுக்ஷுத்வம் இந்நான்கும் சாதன சதுஷ்டயங்களாம். அத்வைத ப்ரம்மமொன்றே நித்யம், அதற்கன்னியமானவனைத்தும் அனித்தியமெனப் பகுத்தறிதலே நித்யா நித்யவஸ்து விவேகம். இகலோக பரலோக போகங்களிலிச்சையில்லாமை இகமுத்திரார்த்த பல போக விராகம் எனப்படும்.

சமாதி ஷட்சம்பத்தி என்பவை ஆறு. அவற்றில்:—(1) சமம் (மனோ நிகரஹம்), (2) தமம் (பாகியேந்திரிய நிக்ரஹம்), (3) உபாதி அல்லது விடல் என்பது பாகிய தர்மங்களினின்றும் நிவர்த்தியடைந்து ஸ்வதர்மானுஷ்டானத்தில் நிலைத்திருத்தலாம், (4) திதீக்ஷை அல்லது சகித்தல் (சீதோஷ்ண சுக துக்காதிகளைச் சமமாகச் சகித்தல்), (5) சிரத்தை என்பது குரு, வேதாந்தசாத்திரங்களில் விசுவாசம் வைத்தலாம், (6) சமாதானம் (சித்த ஏகாக்ரதன்மை). மோக்ஷத்தை யடையவேண்டுமென்னு மிச்சையே முமுக்ஷுத்வம் எனப்படும். இச்சாதன சதுஷ்டயங்களை யடைந்தவர்களே தத்துவ விசாரம் செய்வதற் கதிகாரிகளாவார்கள். குருபதேசத்தாலத் தத்துவ விவேகத்தை யவர்களடையவேண்டும்.

ஆதலால் குருசேவையே ஞானமார்க்கத்தில் ஐந்தாவது படி. சாதனசதுஷ்டய சம்பன்னனானவன் தனது பூர்வ புண்ணிய பலனாக சத்குரு தரிசனத்தை யடைவன், அவரைச் சரணாகதியடைந்து அவருக்குச் சீடனாகி, அவருக்கருளுண்டாகும்படி தொண்டுசெய்துவருவன். அவனுக்குப் பக்குவகாலம் வந்ததும் அதையறிந்த சத்குருவானவர் அவன்பேரில் கிருபைகூர்ந்து அவனுக்குத் 'தத்வமஸி' முதலிய மகா வாக்யங்களின் இரகசியார்த்தமான தத்துவோபதேசஞ் செய்வர். அதனால் சீடன் தன்னியனாவன். அவனுடைய பேதபுத்தி நீங்கிவிடுகிறது. சமுசயங்கள் போய்விடுகின்றன. நிச்சயஞானம் உண்டாகிறது. ஆத்மதரிசனம் பெறுகிறான். அதாவது தன்னைத் தானறிகிறான். சொரூபஞானமுண்டாகிறது. சொரூபஞானத்தில் இலயமடைகிறான். அதாவது பிரம்மான்ம ஐக்கியஞானம் பெறுகிறான்.

ஆயினும் பூர்வவாசனையால் மறுபடியும் மறுபடியும் பந்தங்களும் உலகவாசனைகளுமிழுக்கலாகும். அதனால் இவனது மனது சலிக்கும். ஞானத்திற்கு ஓரசைவு ஏற்படும். இவைகள் தன்னைப் பாதிக்காமலிருப்பதற்காகவும் தன்னுடைய ஞானம் திடப்படும்பொருட்டும், குருசந்நிதானத்தில் சிரவணம் செய்த விஷயங்களை அடிக்கடி மனனம் செய்யவேண்டும். அதன்மேல் ஏகாக்கிர சிந்தையுடனிடைவிடாமல் குருபதேசத்தில் லயித்திருப்பதாகிய நிதித்தியாசனம் அப்யசிக்கவேண்டும். மெய்மறந்து பிரம்ம சொரூபமாய் தனக்குத் தானாகவிருப்பது சமாதி.

குருபதேசத்தை யடைந்தபின்னேற்பட்ட சிரவண மனனநிதித்யாசன சமாதிகளென்னும் நான்கு படிகளையுடைய சுவானுபூதியினாலே, ப்ரம்மவித்தானவன், சொரூபஞானமுண்டாய், சொரூபஞானத்தில் இலயித்து, சகல பந்தங்களினின்றும் விடுபட்டு, முக்தியடைகின்றான்.

இந்தச் சுவானுபூதி அவசியம் செய்யவேண்டும். ஏனெனில், அது சத்குருவானவர் நட்டவிதை செடியாய் முளைத்து முக்தியாகிய பலனைக் கொடுப்பதற்கு அவசியமாய் செய்யவேண்டிய பாத்திகட்டல், தண்ணீர் பாய்ச்சல் முதலியனபோன்ற பாங்குகளாகவிருக்கின்றது.

இதுபரியந்தம் ஞானமார்க்கத்தின் படிகளைப்பற்றிக் கூறப்பட்டது. இஞ்ஞானத்தின் பலனென்னவெனில், முக்தியே. முக்தியாவது பந்தத்தினின்றும் விடுபடுதல். அஞ்ஞானத்தினால் இல்லாததை உண்டென்று பிரமித்திருப்பதால் பந்தம் ஏற்படுகிறது. 'பரம்மைவ ஸத்யம்' 'ப்ரம்மாத் அன்யம்ந' 'ப்ரம்மாக மேவ' என்னும் உறுதி, ஞானத்தாலேற்படுகிறது. இருட்டு நீங்கி வெளிச்சம் உண்டானதுபோலாகிறது. உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. சூரியனுக்கு ப்ரகாசமும், ஜலத்திற்குக் குளிர்ச்சியும் அக்கினிக்கு உஷ்ணமும் எப்படிச் சுபாவமோ, அப்படியே ஆத்மாவிற்குச் சச்சிதானந்த நித்ய நிர்மலத்தன்மை சுபாவம். முக்காலுமுள்ளது சத்துத்தன்மை. குன்றாத பிரகாசத்தன்மை, அதாவது ஞானசொரூபம் சித்துத்தன்மை. மிகுந்த பிரியத்திற்கு விஷயமாந்தன்மை



ஆனந்தத்தன்மை. உற்பத்தி நாசமில்லாததன்மை நித்தியத்தன்மை. அவித்தையாதிமலங்களில்லாததன்மை நிர்மலத்தன்மை. இவை ஆத்மாவின் சுபாவம், அந்த ஆத்மா தானென்று அறிந்து, அபரோக்ஷமாய் ஆத்ம ஸ்வரூபத்தையறிந்து, சொரூபானந்தமாகிய இணையற்ற பேரானந்தக் கடலிலாழ்ந்திருப்பதே பரம்மானந்தம் என்பது. இதுவே ஞானத்தின் பலன்.

இம் முக்தியையடைய ஞானமார்க்கமல்லாது வேறு மார்க்கமில்லையாவென்றால் கர்மம் முதலிய சாதனங்களிருக்கின்றன. ஆயினும், எப்படி அக்நியின்றி பாகம் ஆகாதோ, அப்படி ஞானமின்றி மோக்ஷம் சித்தியாது. மோக்ஷத்திற்கு ஞானமே முக்கிய காரணம்.

கர்மமானது அஞ்ஞானத்திற்கு விரோதமானதன்று. அதுமட்டுமல்ல. கர்மமே அஞ்ஞானத்தின் ஓர் காரியம். ஆதலால் கர்மம் அவித்தையை நேராய் வேரோடு கெடுக்கமாட்டாது. ஞானமே அஞ்ஞானத்தைத் துலைக்கவேண்டும். வித்தைதான் அவித்தையைக் கெடுக்கும். வேறொன்றும் அப்படிச் செய்யாது. இருட்டைப் போக்கடிப்பது சூரியன்தானல்லவா? ஞானசூரியன் மனதிலுதித்ததும் தமசாகிய அஞ்ஞான இருள்போய்விடுகிறது. ஊனக்கண்ணுக்குச் சத்தியமாய்த் தோற்றிய மாயா கற்பிதமாகிய ஜகத் ஞானக்கண்ணை விழித்தவுடன் சொப்பனத்திற் காணப்பட்ட பட்டணம்போல் மித்தையாய்விடுகிறது. அத்வைத ப்ரம்மமே ஸத்யமாய் விளங்குகிறது

அ. நாராயணஸ்வாமி, B A., B L.,
ஈரோட்,

---

## ஆன்ம ஈடேற்றம்.

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே மிகவும் மேலான தென்பதும், முத்திநிலை யடைதற்குத் தேவர்களும் மானிடராய்ப் பிறத்தல் வேண்டுமென்பதும் சைவ சமயிகளுடைய கொள்கைகளாகும். ஏனைய மதத்தவர்களும் மானிடப் பிறவி அதிகம் விசேஷமுடைத் தென்பதை ஒத்துக்கொள்வர். உலகத்திலே பலவேறு வகைப்பட்ட சமயங்கள் வழங்கி வந்தாலும், ஆன்ம ஈடேற்றம் பெற்றாலன்றி இப்பிறவியின் பயனை உள்ளபடி நாம் அடைதல் கூடாது என்பதைப் பற்றி ஒவ்வொரு சமயமும் எடுத்துக்கூறும். ஆன்மா நற்கதி யடைதற்கு அனேக வித்தியாசமான வழிவகைகளைக் குறித்துப் போதிப்பதனாலேயே சமயங்கள் ஒன்றுக்கொன்று மாறுபடுவது போற் காணப்படுகின்றன. இந்த வேறுபாடு தவிர்க்கக்கூடியதல்ல. ஏனெனில் சமயங்களெல்லாம் அவையவைதோன்றிய காலங்களுக்கும் இடங்களுக்கும் சனங்களின் அறிவு நிலைமைக்கும் ஏற்ற சற்போதனைகளைத் தம்முள் அடக்கி யிருக்கின்றன. ஆன்மா என்று ஒன்றுண்டு, அது கடவுளை யடைந்து நித்திய இன்பத்தைப் பெறுதற்கு முயலல் வேண்டும் என்றே அனேக மதங்கள் முடிபுரையாகக் கூறும். "சொல்

வது யார்க்கும் எளிது, அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்" என்றபடி எந்த விஷயத்தைப் பற்றியும் பேசுவது அதிற் கூறியபடி செய்வதிலும் மிகவும் இலேசென்பது நாமனைவரும் அனுபவத்திற் கண்டறிந்த விஷயம். சகல மதங்களையும் பற்றிப் பிழையறப் போதிக்கும் கல்விமான்கள் அனேகரை நாம் காணக்கூடியதாயிருக்கும். ஆனால் போதிக்கிறபடி உண்மையாய்ச் சாதிக்கும் ஒழுக்கம் வாய்ந்த அறிவிற் சிறந்த பெரியோர்களைத் தற்காலத்தில் எவ்விடத்தும் காண்பது மிகவும் அரிதாயிருக்கிறது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்றும் "அப்பா என்றால் உச்சி குளிருமா?" என்றும் இன்னும் இக்கருத்தைக்கொண்ட அனேக பழமொழிகள் உலகில் வழங்கி வருவதை நாமறிவோம். அறிந்திருந்தும் "பழைய காத்தானே காத்தான்" என்றபடி போதனையைப் பற்றிக் கவனமாயிருக்கின்றோமே தவிர, சாதனையை உற்று நோக்கும்பொழுது "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற அளவிலேயே நம்மவரிற் பெரும்பாலாருடைய சீவியம் முடிகிறதாகக் காண்பது எவ்வளவு விசனிக்கத் தக்கது! எனன தொழிலை நாம் செய்தபோதிலும் இடைவிடாது நம்முடைய தியானம் எதிலே இருத்தல் வேண்டும்? நம்முடைய சீவியத்தின் இலக்கு என்னவாயிருத்தல் உசிதம் என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வதே இவ்விஷயத்தின் நோக்கமாகும்.

நாம் இந்த உலகத்தில் பிறந்த நாள்முதல் இறக்கும் வரையும் "சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்" என்ற பிரகாரமாய் இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்துக்கொண் டிருக்கிறோம். உலகத்திலே தோன்றுவன யாவும் மறைதலையும் பிறப்பன அனைத்தும் இறப்பதையும் காண்கிறோம். ஒருபோதும் பிரிய விரும்பாதவரையும் பிரிந்திருக்க நேரிடுகிறது. அதுவுமன்றித் திரும்பக் காணமுடியாத நிலைவரமும் சிலவேளை ஏற்படுகின்றது. கண்மணிகளிலும் அதிகமாக நேசித்த காதலனைக் காதலியும், பத்தினியைப் பர்த்தாவும், பெற்றோரைப் பிள்ளைகளும், பிள்ளைகளைப் பெற்றோரும், காத்திராப்பிரகாரம் இழந்து துன்புறுவது சாதாரணமாயிருக்கின்றது. பொதுவாய் உலகத்திலே பஞ்சப்புலன்களாலும் நாமறியக் கூடியனவாயிருப்பன யாவும் ஏதோ ஒரு காலத்தில் இல்லாதிருக்கும் இலட்சணம் வாய்ந்ததாக இவ்வுலகமிருக்கிறது. "காடுங்கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன் பிறகே" ஓடுவதால் நிகழும் சங்கடங்களுக்காளாகி அலைந்து காலத்துக்குக் காலம் துயருறுகிறோம். இன்றைக்கு அழகு பொருந்தியதாகத் தோற்றப்படும் ஒரு வஸ்து, நாளைக்கு அருகத் தக்க நிலைக்கு மாறுவது அனுபவம். இப்படி யெல்லாமிருந்தும் நாமேன் எப்பொழுதும் அழியும் பொருட்களில் ஆசை வைத்து அல்லல் அடையவேண்டும்?

துன்பத்துக்கு முக்கிய காரணம் ஆசை என்பது மறுக்கொணா உண்மை. அழியும் பொருட்களில் ஆசை வைப்பவன் அவை அழியும்



காலம் வரும்பொழுது கட்டாயம் துன்புறுவான். துன்பத்திலிருந்து முற்றாய் விலக விரும்புமொருவன் அநித்திய வஸ்துவில் பற்றுவையாமல் நித்தியமாயுள்ளதையே பற்றமுயல வேண்டும். அது இலகுவான காரியமல்ல. ஆன்மா ஒரு நித்திய வஸ்து. அது எல்லாவித உலகப்பற்றையும் விட்டு ஈஸ்வரனை அடைந்து உய்தல் வேண்டுமென்னும் ஒரே பற்றுடையதாயிருத்தல் வேண்டும். வேறுவகையாய்ச் சொல்லில், நாமனைவரும் உலகப் பற்றைச் சிறிது சிறிதாய் விட்டு, ஆன்ம ஈடேற்றம் பெறுவதிலேயே நாட்டமுடையவராய் நம் வாழ்நாளிற் பெரும் பாகத்தைச் செலவழித்தல் வேண்டும். அப்படிச் செய்தால்தான் நமக்கு உண்மையான சந்தோஷமும் மன ஆறுதலும் உண்டாகும். காலத்துக்குக் காலம் அனேக மகான்கள் உலகத்தின் பல பாகங்களிலும் தோன்றி, நாம் எப்படிச் சீவித்தால் ஆன்ம ஈடேற்றம் பெறுதல் கூடும் என்பதைப் பற்றித் தங்களுடைய சீவியத்தின் வாயிலாக நமக்குச் சிறந்த முன்மாதிரி காட்டியிருக்கிறார்கள். அவர்களைப் போலச் சீவிப்பது பெரும் கஷ்டமல்ல. நம்முடைய ஈடேற்றத்திற்கு எது தக்கது எது தகாதது என்பதைப் பற்றித் தெளிவாய் விளங்குகிறதற்கு நமக்கு எல்லாவற்றிற்கும் மேலாய் அறிவு வேண்டும். அந்த அறிவைத் தரவல்லது கசடறக்கற்கும் கல்வியே யாகும். கற்றவர்களென்று நாமெண்ணி யிருப்பவர்களிற் சிலர் "ஆன்மா வென்றாலென்ன? கடவுளென்று ஒருவர் இருக்கிறாரா? அவரைக் கண்டவருண்டா? அப்படிக் கண்டவர்கள் யாராவது இருந்தால் மற்றவர்களும் அவர்களைப் போலக் கடவுளைக் காணுதல் கூடுந்தானே" என்று இப்படிப் பட்ட பசப்பு வார்த்தைகளைப் பேசிக்கொண்டு திரிவதினால் தாங்களுங் கெட்டு, மற்றவர்களையும் கேட்டின் பாதையில் விடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களிடஞ் சிக்கி மயங்கினால் "உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்" என்ற மாதிரி நம்மிடத்தில் இயல்பாக இருக்கும் ஆன்ம விசாரமும் அற்றுப்போய்விடும். ஆனபடியால் ஆன்ம ஈடேற்றத்தை நாடி நிற்கும் ஒவ்வொருவரும் கடவுளில்லை யென்று சாதித்து இறுமாந்திருப்பவருடைய கண்ணிலும் காணாமலிருத்தல் மிகவும் உசிதம். நம்மைச் சுற்றி நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூர்மையாக அவதானித்தால் அவைகளிலிருந்து நாம் பெரும் நன்மையை யடைகிறதுமாத்திரமன்றி, தீமையினின்றும் விலகி நடத்தலினால் அடையத்தகும் பிரயோசனத்தைப் பற்றி அறியத் தக்கதாயிருக்கும்.

ஆன்மா பந்திக்கப்பட் டிருக்கும் வகையை உற்று நோக்கினால் அது மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாயிருக்கும். உலகப்பற்றை முற்றா யொழித்துத் துறவு பூண்டு விட்டோமென்று சொல்பவர்களில் அனேகரைக் கவனமாய்ப் பார்த்தால் அவர்கள் சில பற்றுக்களினின்றும் நீங்கி, வேறு சில பாசங்களாற் பந்திக்கப்பட்டர்வர்களாய்க் காணப்படுகின்றார்கள். அது அவர்களுடைய குற்றமல்ல. ஒரே முறையில் நினைத்தவுடனே உலகப்

பற்று முழுவதையும் அறவே விடுக்க நினைத்தல் யானையைக் குத்திச் சுளகால் மூட எத்தனித்தலை யொக்கும். பஞ்சப்புலன்களையும் அவைகளின் இயல்பான நுகர்ச்சியை விட்டுச் சும்மா இருக்கச் செய்தல் அல்லது ஆன்ம ஈடேற்றத்துக்குச் சாதனமான வழியில் நிறுத்துதல் நினைத்தவுடன் செய்யக்கூடிய காரியமல்ல என்பதைப் பற்றிப் பெரும் ஞானிகளும் துறவிகளும் நமக்குக் காட்டி யிருக்கிறார்கள். எல்லாவிதக் கஷ்டங்களையும் மேற்கொண்டு ஆன்ம ஈடேற்றத்தைப் பெற்றுப் பின் அந்த நிலையில் தங்களுக்கிருக்கும் சுகானுபவத்தை நாம் அறிந்து உய்தற்பொருட்டுப் பெரும் மகான்கள் நமக்குக் கைம்மாறு கருதாமல் காலத்துக்குக் காலம் பேருதவி புரிந்திருக்கின்றனர். உலகம் நடைபெறுகிறதற்காக நாம் ஒருவரிலொருவர் பாசம் வைத்து நடக்கவேண்டியதும் உலகிலுள்ள பல பொருட்களிலும் பற்று வைக்கவேண்டியதும் அவசியந்தான். ஆனால் முற்றாய் உலகவிஷயத்தில் அமிழ்ந்து அழிந்து போகாத வண்ணம் மிகவும் விழிப்பாய் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டியது நம் மேற் பொறுத்த பெருங் கடனாகும். இதற்காகக் கடவுளை அல்லும் பகலும் வேண்டி நிற்றல் அதிக நன்மை பயத்தற்கு ஏதுவாகும். பிறர் பொருளில் ஆசை வைப்பதை அறவே விடுத்துச் சுயவெறுப்பைப் பூஷணமாகப் பூண்டு, மற்றவர்களுக்கு இயன்றவரையில் சேவை செய்ய நாம் எப்பொழுதும் முன்வரல் வேண்டும்.

உலகமும் அதிலுள்ள சகல சிருஷ்டிகளும் அநித்திய மாதலால், ஆன்மா அவற்றில் வைத்திருக்கும் பற்றை யொழித்து, அதனாலுண்டாகும் சக்தியைப் பெற்றுக் கடவுளை யடையும் கருத்தை மறவாது, ஈடேற்றம் பெறுதல் ஒன்றையே இலக்காகக் கொண்டு சீவித்தல் வேண்டும். தேகமும் மனமும் சுத்தமாயிருத்தல் ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாதது. இதுபற்றியே மேலான நிலையை அடைய விரும்புகிறவர்கள் தாங்கள் உண்ணும் உணவைப் பற்றியும் செய்யும் செய்கைகளைக் குறித்தும் மிகவும் சாவதானமாயிருக்கிறார்கள். "அறிவுடையாரை அடுத்தாற் போதும்' என்றும் "சற்சனர் உறவு சர்க்கரைப் பாகுபோல்" என்றும் நம்முன்னோர் தம் அனுபவத்தின் சாரத்தைப் பிரசந்தியார் அறிந்து ஈடேறும் வண்ணம் கூறி யிருக்கின்றனர். ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்குச் சற்சன சகவாசம் மிகவும் முக்கியமானது. இதை யறிந்து தான் எக்காலத்தும் உலகம் போற்றித் துதிக்கும் ஞானிகள் தங்கள் சீவியகாலம் முற்றும் சற்சன சங்கத்தை, அல்லது தனிமையை நாடி நின்றனர். நாமும் அவர்களைப் பின்பற்றினாலன்றி அவர்களெய்திய கிடைத்தற் கரும்பதவியைச் சேருதல் கூடாது. "பொரிமாவை மெச்சின பொக்கை வாய்ச்சி" போல உலகம் தான் எல்லாம், சிற்றின்ப நுகர்ச்சியே சிறந்தது என்றெண்ணி மனப்போக்கின்படி யெல்லாம் கண்டபடி நடந்தால் நம்முடைய கதி அதோகதியாகவே முடியும். ஆதலால் நமது சீவியத்தின் ஒரே இலக்கு ஆன்ம



ஈடேற்றம் பெறுவதாயே யிருத்தல் வேண்டுமென்பதைக் கனவிலும் நாம் மறவாதிருத்தல் வேண்டும். திரிகரண சுத்தியைப் பெற்று அதன் வாயிலாக நாமனைவரும் ஆன்ம ஈடேற்றத்தை யெய்த எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

கா. சின்னப்பா,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:—சகோதர சகோதரிகளே! "ஆண்டவன் பிறவிகளிலெல்லாம் மேலானதாகிய இந்த மனிதப் பிறவியை நமக்களித்தது நாம் பிறப்பிறப்பற்ற நித்தியப்பேறாகிய மோக்ஷவீட்டை (அதாவது தம்மை) அடைய வேண்டுமென்ற பெருங் கருணைகொண்டே" என்ற உண்மை யாவர்க்கும் தெரியாமலா இருக்கிறது? இல்லை யில்லை. அனேகர்க்குத் தெரிந்தேயிருக்கிறது. ஆண்டவன் இம்மானிடப் பிறவியையும் இன்னும் வேண்டிய அறிவையும் நமக்களித்திருந்தாலும் நாம் முயற்சி செய்தாலன்றோ அம்முத்திப்பேற்றை யடையலாகும். அது நமக்கு அனுபவிக்கக் கிடைக்கும் சாதாரண சுகதுக்காதி பலன்களைப்போல் வினைப்பயனால் வருவதன்று.

"முத்தியின் விருப்பத்தாலும் முதல்வநற் பாதத்துற்ற
பத்தியினாலு மற்றப் பரனையே பாவிக்கின்ற
நித்தமாந் தியானத் தாலும் நிரந்தர யோகத் தாலும்
சித்தியா மிதுசித்திக்கும் வினையினாற் சித்தியாதால்"
(சொரூபானந்தசித்தி.)

ஆகையால் நாம் முயற்சி செய்யவேண்டியது அவசியம். ஆனால் நாமோ பணம் சம்பாதிப்பதும் உண்பதும் உறங்குவதுமாகக் காலத்தைக் கழிக்கிறோம். பெரும்பாலார் மனைவிமக்கள் வீடுவாசல் யாவற்றையும் விட்டுவிட்டுச் சென்றால்தான் ஞானமடைய முடியும், முத்தி மார்க்கத்தில் செல்ல முடியும் என்று எண்ணுகிறார்கள். இத்தகையோர் யாரேனும் ஒருவர் இல்லறத்திலுள்ளோர் ஞானநூல் வாசிப்பதைக் கண்டால் "இவனுக்கென்ன ஞானம்? பெண்டாட்டி யில்லையா, பிள்ளை பெறவில்லையா, பணம் சம்பாதிக்க உத்தியோகம் செய்யவில்லையா" என்று அலட்சியமாய்க் கூறிவிடுகிறார்கள். இது சுத்த மூடத்தனமன்றி வேறில்லை. ஒருவன் எடுத்ததே எந்தப் பற்றையும் விட்டுவிடமுடியாது. அப்படி விட்டபின்புதான் ஞான அப்பியாசம் செய்யவேண்டுமென்ற விதியுமில்லை. நாம் செய்யவேண்டியதைச் செய்தால் விடவேண்டியது காலம் வரவரத் தானே விட்டுப்போம். காய் பழுத்துவிட்டால் தானே மரத்தைவிட்டு விழுந்துவிடும்.

ஆகையால் இல்லறத்தொழிலை நன்னெறியில் நடத்திக்கொண்டே, "நாம் முத்தியடையவேண்டும்" என்ற ஒரு திட எண்ணத்தை மனதில் உறுதியாய் வைத்துக்கொண்டு, அதற்காக வேலைசெய்வதை உலகில் நமது கட்டாய வேலையாய்க் கருதி, தினம் கொஞ்சகாலத்தை அவ்வழியில் செல

வழித்துவந்தால் சத்சங்க வாசனையால் முத்திமார்க்கம் கட்டாயம் கிட்டும். இப்பிறவியிலேயே கிடைக்காவிடினும் இனிவரும் பிறவியிலேனும் கிடைக்கும்.

பத்திரிகாசிரியர்.

---

## நாலடியார் வசனம்

(225-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 13 - ம் அதிகாரம்.

#### தீவினையச்சம்.

**(தீய காரியங்களைச் செய்ய அஞ்சுதல்.)**

சுடுகாடுகள், சிலகாலம் சம்சார துக்கத்தில் தங்கியிருந்து (பின்) அறவற நெறியில் சேராத மனிதர்களின் பிணங்களை யுடையவையாம். ஆனால், நல்லறிவில்லாத அற்ப அறிவையுடைய மூடர்களின் வயிறுகள், பொருந்திய (இழிவாகிய) மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் சுடுகாடுகளாம். (1)

வண்டுகள் சப்திக்கும்படியான காட்டிற் பொருந்தி வசிக்கும் கவுதாரி காடை முதலிய பறவைகளைப் (பிடித்து) கூட்டில் பொருந்தும்படி வைத்து வளர்ப்பவர்கள், (மறு பிறப்பில்) இரும்பு விலங்கு மாட்டப்பட்ட கால்களையுடையவர்களாய், கருமையான வட்டை நிலங்களிலும் விளை நிலங்களிலும் (வேலை செய்யச்) செல்வார்கள். (2)

முற்பிறப்பில் நண்டை(ப் பிடித்துத் தின்ன) விரும்பி (அதன்) கால்களை முரித்துத்தின்றதனாலாகிய பழைய தீவினையானது (மறு பிறப்பில்) வந்து சேர்ந்தால், (அத் தீவினையைச் செய்தவர்கள்) உள்ளங்கை மாத்திரம் சங்கு மணிபோல நிற்க, (மற்ற) விரல்களெல்லாம் அழுகிப்போய் (மிகுந்த) துன்பத்தைத் தரும்படியான குஷ்ட நோயை யடைவார்கள். (3)

(குளிர்ந்த தன்மையுடைய) நெய்யும் நெருப்பின் வெப்பத்தை யடைந்தால், (உடம்பை) எரிக்கும்படி காய்ந்து, (தன்னைச் சேர்ந்தவர்களுக்கு) துன்பமடையும்படியான நோயை யுண்டாக்கும். (அதுபோல), (நல்லொழுக்கத்தினின்றும்) தவறுதலில்லாத மேலோரும், தீய காரியங்களைச் செய்யும் கீழ் மக்களோடு சேர்ந்து, (அதனால் தமது நல்லொழுக்கத்தினின்றும்) தவறி, மிகவும் கொடிய செயல்களைச் செய்வார்கள். (4)

(அறிவினால்) பெரியோர்களுடைய சிநேகமானது, இளஞ் சந்திரன் போல, தினந்தோறும் படிப்படியாக வளரும். (அறிவினால்) சிறியோர் சிநேகமோ, ஆகாயத்திற் செல்லும் பூரணச்சந்திரன் போல, (தினந்தோறும் படிப்படியாக) தானாகவே குறைந்து போகும். (5)

(இவர் நற்குண நற்செய்கைகளால்) நிறைந்தவரென்று மதித்து (நீ) சிலரிடம் சிநேகம் செய்தாய். (அப்படிச்) சேர்ந்த உனக்கு, (நீ நினைத்தபடி) அந் நற்குணங்கள் அவர்களிடம் இல்லையானால், (அது) ஒருவன் ஒரு சிமிழியைப் பார்த்து, அதில் வாசனைப் பொருள் இருக்கின்றதென்று நினைத்து, திறந்து பார்த்தபொழுது அதற்குள் வாசனைப் பொருள் காணமல் பாம்பைக் கண்டதுபோன்றதாம். சிநேகம் செய்தவனே! (நீ இதைக்) கேட்பாயாக. (6)



மலைச்சாரல்களில் சிறந்த இரத்தினங்களிருந்து கொண்டு பிரகாசிக்கும்படியான நாட்டை யுடையவனே! (நாம் சொல்வதைக்) கேள். (இவ்வுலகத்தில்) மனிதர்களுடைய (மனமும் செய்கையும் ஒன்று பட்டிராமல்) எண்ணம் வேறாகவும் அவர்களுடைய செய்கை வேறாகவுமிருக்கும். (ஆகையால்) ஒருவருடைய மனதை ஆராய்ந்தறியத்தக்க வல்லமையுடையவர்கள் யாரிருக்கிறார்கள்! (ஒருவருமிலர் என்றபடி.) (7)

சேற்றை நீக்கித் தெளிந்துநிற்கும் அருவி நீர் பொருந்திய அழகிய மலை நாட்டையுடைய பாண்டியனே! மனமார சிநேகிக்காமல் (தங்கள் சொந்த நன்மையையே நாடும் தொழிலையுடையவர்களாய், வஞ்சனையாக சிநேகித்தவர்களுடைய மிகுந்த சிநேகமானது, மனதில் குற்றமுடையதாகும். (8)

(ஒருவன் தனது பகைவனைக் கொல்லுவதற்காக) ஓங்கிய பிரகாசமுள்ள வாளாயுதமானது, அப்பகைவன் கையில் அகப்பட்டுவிட்டால் அப் பகைவனைக் கொல்லாமற்போவது மாத்திரமல்லாமல், அவன் வலிமையையும் அழித்துவிடும். இது உண்மை. (அதுபோல) (மூடர்களுக்குச் செய்யும்) உபகாரமானது இம்மையில் மாத்திரமன்றி, மறுமையிலும் தொடர்ந்து துன்பமுண்டாக்குவதால், அறிவில்லாதவர்களிடத்தினின்றும் நீங்குதல் நல்ல காரியமாம். (9)

என் மனமே! மனையாளிடத்துக் கொண்டுள்ள அன்பைவிடாமல், பிள்ளைகளுக்காகவும் ஏக்கங்கொண்டு எவ்வளவு காலம் வாழ்வாயோ! எவ்வளவு சிறியதாயிருந்தாலும் (ஒருவன்) செய்த நற்காரியமே யல்லாமல் அவனது உயிருக்கு அடையும்படியான நற்பயன் வேறில்லை. (10)

---

## இரண்டாவது பொருட்பால்.

**(பொருளின் பகுப்பை யுணர்த்துவது.)**

### 14 - ம் அதிகாரம். கல்வி

(மனிதர்களுக்கு) மயிர் முடியின் அழகும், மடிப்புள்ள வஸ்திரங்களின் கரையின் அழகும், மஞ்சள் பூச்சின் அழகும் அழகல்ல; நாம் நற்குணமுடையவர்களாயிருத்தல் வேண்டுமென்கிற நல்ல அறிவைக் கொடுப்பதால், கல்வியின் அழகே சிறந்த அழகாகும். (மஞ்சளழகு என்றது பெண்களைக் குறித்து; ஆகவே, பெண்களும் கற்கவேண்டும்; அதுவே அவர்களுக்கும் அழகாகும் என்பது விளங்குகின்றது.) (1)

(கல்வியானது) இவ்வுலகத்திற்குரிய இன்பங்களைக் கொடுக்கும்; பிறர்க்குக் கொடுப்பதால் குறைவு படுதலில்லை; (கல்வி கற்றவர்களாகிய)

தங்களை (புகழை யுண்டாக்குவதால்) விளங்கச்செய்யும்; தாம் உயிரோடிருக்கும்பொழுது அழிந்து போவதில்லை ; (ஆதலால்) கல்வியைப்போல், அஞ்ஞானமாகிய நோயைப்போக்கும் (ஒரு) மருந்தை நாம் எவ்வுலகத்திலும் பார்க்கவில்லை. (கல்வியே அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை யளிக்கும் சிறந்த மருந்தாம்.) (2)

களர் நிலத்தில் உண்டான உப்பைப் பெரியோர்கள் (நல்ல) விளைச்சல் நிலத்தில் உண்டாகும் நெல்லைவிட மேலானதாகக் கொள்வார்கள். (அதுபோல), இழிவான சாதியில் பிறந்தவரானாலும், (நூல்களைக்) கற்று (அவற்றின்) பொருளை அறிந்தவர்களை, உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மேன்மைப்படுத்த வேண்டும். (3)

(கல்வி, செல்வத்தைப்போல) வைத்துள்ள இடத்திலிருந்து அந்நியரால் அபகரிக்கப்படமாட்டாது. (பெற்றுக் கொள்ளத்தக்கவர்கள்) கிடைத்து, (அவருக்குக்) கொடுத்தால் குறைவுபடுதலில்லை. மிக்க சிறப்பையுடைய அரசர்கள் கோபித்தால் (அதனை) கவர்ந்து கொள்ளமாட்டார்கள். (ஆகையால்), ஒருவன் தன் பிள்ளைகளுக்கு ஆஸ்தியாகச் சேர்த்து வைக்கத் தக்கவை கல்விப்பொருளேயாம். செல்வம் முதலிய மற்றைப் பொருள்களல்ல. (4)

(கற்கவேண்டிய) கல்விகளோ அளவற்றன. (முழுமையும் கற்போமென்றால்) கற்பவர்களுடைய வாழ்நாட்களோ சிலவாம். (அவற்றிலும்) மெல்ல யோசித்துப்பார்த்தால் (படிப்பிற்குத் தடையாகும்) நோய்களோ பலவாம். (ஆதலால், அறிவுடையோர், நீரையும் பாலையும் கலந்து வைத்தால்) நீரை ஒழித்துப் பாலை உண்ணும் அன்னப் பறவைபோல, (நூல்களின் தன்மையை) அறிந்து, தெளிவாக ஆராய்ச்சிசெய்து (உயிர்க்கு உறுதியாக்கும்) பொருத்தமான (ஆன்மார்த்த நூல்களையே) கற்பார்கள். (5)

(ஆற்றில்) மரக்கலத்தை ஓட்டுகிறவன், ஆராயுமிடத்து பழமையான சாதியில், தாழ்ந்த சாதியில் சேர்ந்தவனென்று இகழாமல் (பெரியோர்) அவன் துணையால் அந்த ஆற்றைக் கடப்பார்கள். (அதுபோலவே) நூல்களைக் கற்றறிந்த புலவனை (அவன் தாழ்ந்த சாதியானானாலும்) அவனைத் துணையாகக்கொண்டு நல்ல நூல்களைக் கற்கவேண்டும். (6)

கெடுதலில்லாத பழமையாகிய நூற் கேள்விகளைக் (கேட்கும்) தன்மையுடையவர்கள், பகைக்கும் குணமில்லாதவர்களும் நுண்ணறிவு உடையவர்களுமான கற்றவர் கூட்டத்திலே சேர்ந்திருந்து சந்தோஷமடைவதைவிட, விசாலமான ஆகாயத்தில் வசிப்பவர்களாகிய தேவர்களுடைய சுவர்க்கலோகம் இன்பமுண்டாக்குவதாயிருந்தால் பார்ப்போம். (சுவர்க்க இன்பத்தைவிட, நற்கல்விகற்ற புலவரோடு கலந்திருந்து அனுபவிக்கும் இன்பமே சிறந்தது என்றபடி.) (7)

சப்திக்கின்ற கடலினது குளிர்ச்சி பொருந்திய கரையையுடைய பாண்டியனே ! (பல நூல்களைக்) கற்றறிந்தவர்களுடைய சிநேகமானது



கரும்பை நுனியிலிருந்து தின்றது போன்றதாம். (வர வர அதிக இன்பத்தைக் கொடுக்கும்.) கல்வி யறிவாகிய குணமில்லாத அன்பற்றவர்களுடைய சிநேகமானது, (கரும்பை) நுனியிலிருந்து தின்பதை விட்டு வேரிலிருந்து தின்றதைப் போன்ற தன்மையை உடையதாகும். (முதலில் இன்பம் மிகுந்திருந்து போகப்போக குறைந்து விடும்.) (அதி-13 பாட்டு. 5-ன். கருத்தை இதனோடு ஒப்பிடுக.) (8)

பழமையான சிறப்பையும் ஒளிபொருந்திய நிறத்தையு முடைய பாதிரிப்பூவைச் சேர்தலால், புதியபானையானது (வாசனைபெற்று), (பின்பு), தன்னிடத்திலுள்ள தண்ணீர்க்கும், அந்தப் பரிமளத்தைக் கொடுக்கும். அதுபோல, (ஒருவர்) தாம் படியாதவரானாலும், படித்தவர்களைச் சேர்ந்து ஒழுகினால், தினந்தோறும் நல்லறிவு உண்டாகப்பெறுவர். (9)

அளவுமிகுந்த சாஸ்திரங்களுக்குள் தத்துவ ஞானத்தைத்தரும் நூல்களைக்கற்காமல், இவ்வுலகத்திற் குரிய நூல்களைப் படிப்பதெல்லாம், 'கல கல' வென்று வீணாகக்கூவும் அளவுடையதே யல்லாமல், அவற்றைக் கொண்டு பிறவித்துன்பம் நீங்கும் வகையை அறிபவர் இல்லை. (அதி. 6. பாட்டு. 2-ன். கருத்தையும் இதனோடு ஒப்பிடுக.) (தொடரும்.) (10)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
சித்தூர்.

## ஆரிய சித்தாந்தம்.

### (சர்வசத்தி)

(221-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் கூறிவந்தவைகளை விளக்கும் பொருட்டு சிலவிஷயம் வரைவது, அவசியம். அதாவது ஆன்மா அந்தத்தில் அடையும் இடமேயாம். இதையே மோட்ச ஸ்தலமென்று முன்னர்க் கூறப்பட்டது. அதுயாது? பொருளா ? குணமா ? இடமா ? என்பனவாதிப் பல கேள்விகளுக்கு இடமாய் நிற்பது. அது சத்து சித்து ஆநந்தம் எனப் பலபெயர் பெறும். இதைப்பொருள் என்றே வேதங்கள் கூறும். பொருளாயின் மனவாக்காதி இந்திரியங்களுக்கும், நுட்பப் பொருள்களைப் பெரிதாக்கித் தெளிவாகப் புலப்படுத்தும் எவ்விதக் கருவிகளின் ஆராய்ச்சிக்கும் அகப்படாமலிருக்குமா ? அது சர்வசக்திகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்கும் ஒரு அதிநுட்பமான பொருள். எங்கும் வியாபித்து எல்லாவற்றையுந் தனது வியாபகசக்திக்குள் நிலைபெற நிறுத்தி, அவற்றினுள்ளும் தான் வியாப்பியமாய் நிற்பதொன்று. அது அணுவுக்கு அணுவாயும் மேருவுக்கு மேருவாயும் உள்ளதென்று வேதம் வியந்து கூறும். அது எல்லாவற்றிலும் வியாபித்து பரமாணுக்களுக்குப் பரமாணுவா யிருப்பதினால் கருவிகளுக்கு அகப்படுவதில்லை. புலன்களுக்குப் புலப்படுவதில்லை. ஆயினும் பக்தர்கள் பாவனைப்படி அவ்வப் பொருளாய் வெளிப்படும் சக்தியுள்ளது. அப்பொருளின் சக்திகள் எல்லாவற்றையும் மூன்று வகையாக்கி அதன் மகிமையை விளக்கு

வார் ஆரிய சித்தாந்திகளான பதார்த்தகுண சோதகர்கள். அவை சலனம் நிச்சலனம், கிராகியம் என்பனவாம்.

சலனம் என்பது அசைத்தல், அசைதல்; நிச்சலனம் என்பது நிறுத்தல், நிற்றல்; கிராகியம் என்பது கவர்ச்சி, இழுத்தல் என்பனவாம். இம்மூன்றனுள் சர்வசக்திகளும் அடங்கும் என்பர் ஞானத்திற் சிறந்த ஆரியர். எல்லாச்சக்திகளும் ஒருங்கேகூடி நிற்பதினாலேதான், காண்பது காணப்படுவது எல்லாம் அதுவேயென்று வேதம் கூறுகின்றது. அது எங்குமிருந்து சகல பொருள்களுக்கும் ஆதாரமாகியும், அவற்றைத் தொழிற்படுத்துவதாயும், அவற்றை நிலைபெயராமல் நிறுத்துவதாயுமிருக்கின்றது. தனது வியாபகத்துக்கு உட்பட்ட பொருள்களை நிச்சலனம் அல்லது நிறுத்தல் என்னும் நிலைவிட்டுப் பெயராமல் நிற்கும்படியும், சலனம்-அசைத்தலென்னும் சுழலும்படி இயக்கியும், கவர்ச்சி—இழுத்தல் என்னும் சக்தியால் தான் அவைகளைத் தரித்துத் தாங்கிக்கொண்டும் சர்வாண்ட சராசரங்களையும் நடத்திக்கொண்டு தான் சலன மற்று நிற்கின்றது. அதனாலேதான் உலகம் அநாதிநித்தியமாய் நடைபெற்று வருகின்றது. சர்வசக்தியும் உடைய பொருளாதலால் குணமென்றாவது பொருளென்றாவது கண்டறியச்சாத்தியப் படாமலிருக்கின்றது. அதுவே பொருளாகவும் பொருளின் குணமாகவும் காணப்படுகின்றது. நீரினின்றும் பாலைப் பிரித்துக்கொள்ளும் அன்னத்தைப்போல யோகிகள் அதனை யுணர்கின்றார்கள். ஏனென்றால் ஞானமென்று ஒன்றையே அவர்கள் அதை யுணரும் கருவியாகக் கொண்டனர். ஞானத்தை அன்றி வேறெதனாலும் அதைக்காண முடியாது. அது ஞானமே சொரூபமாயுள்ளது ஆதலால் ஞானத்தை ஞானத்தினாலேயே காணவேண்டும். எதுபோலவென்றால் நுட்பமான பூதம் பொருள்களைக் கண்ணாடி முதலிய பூதக் கருவிகளாலேயே காண்பது போலவாம்.

ஆயின் சர்வசக்தியும் ஒரு இடத்தில் ஒருங்கே நிற்குமென்பது எப்படி? பிரத்தியட்சமா? அனுபவமா? யுக்தியா? எதனால் அறிவது எனின், ஞானிகள் அனுபவத்தினாலே பிரத்தியட்சமாகவே காண்பார்கள். அவரொழிந்தவர்கள் அனுமானம் உபமானம் ஆகிய யுக்திகளினாலே கண்டறிந்து நிச்சயிக்கவேண்டும். நிச்சயித்தபின் அனுபவத்துக்குக் கொண்டுவந்து கண்டுகொள்ளவேண்டும். ஒரு உபமானத்தை யெடுத்து ஊகித்து ஆராய்ந்தால் கண்டுகொள்ளலாம். அதாவது பூமியை ஆராய்ந்தால் அறியத்தகும். இது ஏகதேச வுபமானந்தான். பூமியினிடத்தில் சர்வசக்தியும் அடங்கிய மூவகைச் சக்தியும் உண்டு. கிராகிய சக்தியினால் சகல பதார்த்தங்களையும் தாங்கி நிற்கின்றது. நிறுத்தும் சக்தியினால் மலை, மரம், கொடி, செடி முதலிய அசரப் பொருள்களை நிலைபெறச் செய்கின்றது. இயக்கும் சக்தியால் சரப்பொருள்களை ஓடித் திரியச்செய்கின்றது. எல்லாவற்றுக்கும் தான் ஆதாரமாய் நின்று சகல பொருள்களையுந் தரித்துக் காக்கின்றது. தன்னிடத்தில் விழுந்துகிடக்கும் வித்து முதலியவைகளைத் தன் கிராகிய



சக்தியால் வேரூன்றச்செய்து, இயக்கும் சக்தியால் மேலே முளைகிளம்பச் செய்து விருத்தியாக்கிப், பரிபாலிக்கின்றது. தான் தனது சக்தியால் அவற்றினுள்ளும் வியாபித்து நின்று அவற்றைப் பருத்து உயர்ந்து தழைத்துச் செழித்து வளர்ந்து முதிர்ந்து பலன்தரச் செய்கின்றது. இத்தொழிலுக்கு அப்பு, வாயு, அக்கினியாகிய சூரியன் இவைகளும் உதவிபுரிகின்றன. ஆயினும் தானே அப்பொருள்களாகவும், அவைகளே தானாகவும் நின்று, அவற்றிற்குரிய ருசி, மணம் முதலிய குணங்களையும் விளக்கி யுபகரிக்கின்றது. பொருள் அநந்தம்வகை, அவ்வவற்றிற்கும் அவ்வவையாய் நின்று சிருஷ்டிஸ்திதி லயம் என்கிற முத்தொழில்களையும் செய்கின்றது. பூமியில் ஏனைய பூதங்களாகிற அப்பு, தேயு, வாய்வு, ஆகாயமென்கிற பூதங்களின் கூறுகளும் சிறிது அடங்கி நிற்கிறபடியால் அவற்றின் சக்தியையும் அவாவி வேண்டிய அளவு கிரகித்துக்கொண்டு சராசரமயமான பிரபஞ்சத்தைப் பாதுகாக்கின்றது. பூமியிலுதித்த பொருள் பூசாரத்தை உண்டே ஜீவிக்கின்றது. இது பூ அண்டத்தைப்பற்றியது. இப்படியே பஞ்சபூதங்களிலும் இந்தச் சக்தி நிறைந்து இருந்து அங்கங்குள்ள பொருள்களைப் பரிபாலிக்கின்றனவென்பது ஆரியசித்தாந்திகளின் கொள்கை. சூரியன், அங்காரகன், குரு, கார்த்திகை முதலிய அண்டங்களை அக்கினி அண்டங்கள் என்பர். இது நிற்க.

இப்பொழுது காட்டிய திருஷ்டாந்தத்தினால் பூமியானது தன்னிடத்தில் உற்பவிக்கும் பொருள்கள்தோறும் வியாபித்துக் கலந்து நின்று தானே அப்பொருள்களாகியும், அப்பொருள்களே தானாகியும் கலந்து நிற்பதுபோலவும், அதனிடத்தில் அவ்வப்பொருள்களுக்குரிய பற்பல சக்திகளை யவ்வவற்றுக்குக் கொடுத்தும் தான் அவற்றுக்கு வேறாகியும் நிற்பது போலவும் பரமான்மாவும் எல்லாப் பொருள்களினிடத்தும் தான் அவையென்கிற வேறுபாடின்றிக் கலந்து நிற்கும். இதனால் பூமியினிடத்தில் அனந்த சக்திகளுண்டென்றும் அவை பதார்த்தங்களுடன் கலந்தே தோன்றா நிற்குமென்பதும் புலப்படும். பொருள்களின் குணங்கள் எல்லாம் பரிபாக முதிர்ச்சியினால் பூமி காரணமாக வெளிப்படுவதேயன்றிப் பூமியினிடத்திலிருந்து உண்டாகிறதல்லவாதலால் பூமியினிடத்தில் சர்வ சக்தியும் உண்டாகும் என்பது எப்படிப் பொருந்துமெனின், அதுபற்றியே ஏகதேச வுபமானம் என்று கூறித் தொடங்கினோம். ஒரு முளையானது சிறிய உளுந்தைப்போலக் காணப்படுகின்றது. இரண்டொரு தினங்களில் ஒரு விரலளவாகின்றது. நாளடைவில் சாகோபசாகைகளாய்ப் பரந்து வெகு பெரிதாய்விடுகின்றது. அது எப்படியாயிற்று? நென்மணியளவாயிருந்த ஒரு விதை முளைத்துப் பத்துப்பாரம் இருபதுபாரம் அளவுள்ள பெரிய விருட்சமாவதெப்படி? பூமியானது சாராம்ச சக்தி ரூபமாய் அதனுள் தினந்தோறுஞ் சிறிது சிறிதாகப் பிரவேசித்து நிற்பதனால் அல்லவோ அது அவ்வளவு பெரிதாயிற்று. ஆதலால் பூமியினிடத்தில்தான் அதன் மயமாக மாறும்

சக்தியும் அந்த வித்துக்கு அதைக்கொண்டு விருத்தியாகவும் உண்டென்பதே சித்தம். பூமியினிடத்தில் அநந்த சக்திகளும் சூட்சும ரூபமாயுண்டென்பது கொள்ளற்பாலது. "உள்ளது போகாது இல்லது வாராது" என்கிற பிரமாண வசனத்தினால் அவ்விரு பொருள்களினிடத்திலும் உள்ள சக்தியே இவ்வாறாயிற்று.

இனி ஒரு பொருளினிடத்தில் ஒரே குணமும், இரண்டு மூன்று முதலிய ஒன்றுக்கொன்று மாறுதலையான குணங்களுமுள்ளவென்று பதார்த்த பரிசோதகர்களும் கூறுகின்றார்கள். பிரத்தியட்ச நூலாகிய வைத்திய சாஸ்திரங்களும் கூறுகின்றன. இதுகாறுங் கூறியது ஒரு பொருளினிடத்தில் பல குணங்க ளிருக்கலாமென்பது விளக்குதற்கே. பூசாரங் குறைந்த சில விடங்களில் பயிர்கள் விருத்தியாவதில்லை. விருத்தியானாலும் பலன் தருவதில்லை. விருத்தியானாலும் அவ்வவற்றிற்குரிய சரியான ருசியும், மணமுமிருப்பதில்லை. இதனாற் பூமியின் சக்தி பலவெனப்படும். இப்படியே ஏகரசமான ஒரு பொருளினிடத்தில் அனந்த குணங்களு முளவாமென்று கொள்க.

இவ்விதமாகவே பரமான்மாவினிடத்தில் அனந்த சக்திகளு முள. பூமியைப்போலவே அதுவும் எவ்வெப்பொருளோடு கலந்து நிற்கிறதோ அவ்வப் பொருள்களாகவே காணப்படும். அவ்வப் பொருள்களின் குணங்களை விருத்தியாக்கி அவற்றைப் பரிபாகப்படுத்தும். இதனையே தெய்வம், என்று கூறும் நூல்கள்.

மூன்று பொருள்கள் அனாதிப் பொருள்களாம். இப்பொருள்களை அத்வைத சித்தாந்திகள் ஜகம், ஜீவன், பரம் என்பார்கள். சைவ சித்தாந்திகள் பதி, பசு, பாசம் என்பார்கள். வைணவர்கள் சித்து, அசித்து, ஈசுவரன் என்பார்கள். இவற்றுள் ஜகம், பாசம், அசித்து என்பவற்றினிடத்திலிருந்தே சராசரங்களுண்டாகின்றன. பரம், பதி, ஈசுவரன் என்பது, இவற்றை அதிஷ்டித்து நின்று ஜகத்தை நடத்தும். ஜீவன், பசு, சித்து என்பது பாசம், அசித்து ஜகம் என்பதிலிருந்து உருவத்தைப் பெற்றுக் கட்புலனுக்குப் புலப்படாநிற்கும். இதுவே ஜீவான்மா, கிஞ்சிக்ஞன் முதலிய பெயர்களாற் கூறப்படும். போகபோக்கியங்களெல்லா மிதற்கேயாம். பரமான்மா என்கிற சர்வ சக்தி இவற்றொடு கலந்து நின்று ஜீவான்மாவைப் பரிபாகப்படுத்தித் தன்னுடைய நிறுத்தும் சக்தியால் கவர்ந்து தன்னிடத்தில் ஒடுக்கிக்கொள்ளும். இதுதான் மீளாக்கதியாம். அவ்விடம் சேர்ந்த பொருள் மீண்டும் வருவதில்லை. அதுதான் சாயுஜ்ய முக்தி யென்னப்படும். எல்லாப் பொருள்களிலும் கலந்து அவற்றுக்குத்தான் வேறுகாமலும் தான் அதுவாகாமலும் தனித்தும் நிற்பதே பரமான்மாவென்கிற பரம்பொருளினியல்பு. ஆகவே அதற்கென ஒரு சொரூபம் ஏற்படாமையால் அதை ஒன்றாலும் அறியக்கூடாது. பாவனை செய்கிறவர்களின் பாவனா சொரூபமே அதற்கும் சொரூபமென்பர். அதனாலேதான் அதைக் காணலாம். இயற்கைச்சொரூபம் ஞானத்தால் உணரப்படும். (தொடரும்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

# பகவத்கீதை வசனம்.

(235-ம் பக்கத் தொடர்ச்சி.)

[முற்கூறிய உலகாயதர்களின் திருஷ்டியும் சாஸ்திரீய திருஷ்டிபோல் இஷ்டமானதாமோ என்னும் அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் கூறியருளுகின்றார்.]

ஏ பார்த்த! மேலே கூறப்பட்ட உலகாயதர்போன்ற அசுர சுபாவமுடையோர் விரும்பப்படாதவர்களாய், வருணாச்சிரமதருமங்களை வெறுத்துவிட்டனர். சத்தியத்தையும் ஆசாரத்தையும் கைவிட்டார்கள். விவேக புத்தியை இழந்துவிட்டார்கள். அற்ப புத்தியோடு கூடிக்கொண்டார்கள். பெரும் பழியான காரியங்களையே செய்வார்கள். தங்கள் காரியங்களால் வரும் இலாப நஷ்டங்களை யறியார்கள். இவர்கள் இவ்வுலகத்தை யழிப்பதற்காகவே அவதரித்தவர்கள் என்றறிதி.

(மேற்கண்ட உலகாயதன்போன்ற அசுர சம்பத்துடையோர் பூலோகத்தை யழிக்கும் குணம்பொருந்திய துஷ்ட ஜெந்துக்களாகிய தாமதயோனிகளில் ஜனிப்பார்கள். ஆதலின் அத்தகைய அதோகதிக்காளாகாதிருக்கவேண்டினோர் அத்தகைய குணங்களை விட்டொழிக்கவேண்டும்.)

மேலும் அவர்கள் எவ்வளவுகாலமாயினும் விஷய போகங்களில் பூரணமாகாதவைகளைப் பூரணமாக்க விரும்பி, உலகோர் தம்மை மெய்ப்பக்தர் என்று கருதுமாறு இல்லாத நற்குணங்களை இருப்பனபோல் காட்டி, அவிவேகம், குரோதம், துவேஷம் முதலிய தீய குணங்களோடு பொருந்தியிருந்தும், தங்களுக்குத் தகுதியில்லாத அசத்தான தவங்களையே செய்யாநிற்பர்.

இன்னும் அவர்கள் மரணபரியந்தம் தங்களுக்குக் கிட்டாத பொருள்களின் மேலேயே சிந்தனையை வைத்திருப்பார்கள். இவ்வுலகில் அனுபவிக்க நேர்கின்ற வனிதையாதி போகங்களையன்றி தருமமென்றாவது மோக்ஷமென்றாவது வேறொரு பொருள் மறந்தும் கிடையாதென்பர். பூமியிற் சனித்து பேராசையாகிய கயிற்றால் பிணிக்கப்பட்ட இந்த அசுர சம்பத்துடையோர் உலகத்தின் அநித்திய போகங்களை யனுபவிப்பதற்காக அநியாய வழிகளில் பொருளைச் சேகரிப்பார்கள்.

(இப்போது பகவான் இத்தகையோரின் மன நாட்டத்தையும் இவர்களடையும் நரகப்பிராப்தியையும் அருளிச்செய்கிறார்.)

ஏ பார்த்த! இவர்கள் அடைந்த தனம் முதலிய பொருள்களால் மனமகிழ்ச்சியடைந்து "நாம் இந்தப் பொருள்களை யடைந்துவிட்டோம், இனி வேண்டிய வேறுபொருள்களைச் சீக்கிரம் அடைவோம் என்றும், இப்பகைவனை யொழித்துவிட்டோம், இனிமேல் மற்றப் பகைவரையும் அழித்துவிடுவோம் என்றும், இவ்வுலகபோக பாக்கியங்களை எம்மைப்போல் அனுபவிக்கத்தக்க சமர்த்தர் ஒருவருமில்லையென்றும், நமக்கு மேலானவர்களாகவும் சமானவர்களாகவும் யார் இருக்கின்றார்கள்? ஒருவருமில்லை" என்றுப் [illegible].

ஏ பார்த்த! இவர்கள் "நாம் ஜனக்கூட்டமும் வல்லமையும் சுகமும் அடைந்திருக்கிறோம். செல்வம் மிக்க அதிகமாகவுடையோம். ஆதலின் எம்மிலும் மேலானவர்கள் ஒருவருமில்லை" என்று தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வார்கள். இன்னமும் "நாங்கள் பல யாகங்களைச் செய்வோம். மேகம்போல் தானங்களை யளிப்போம்" என்று தினந்தோறும் மனோராஜ்ஜியம் செய்வதேயல்லாமல் வேதத்தில் கூறுகிறபடி செய்யார்கள்.

பந்தத்தை யொழித்தற்குக் காரணமாகவில்லாத பலவித துஷ்ட எண்ணங்களிலேயே சுழன்றுகொண்டிருப்பவரும், அடக்கற்கரிய மோகமாகிய வலையில் சிக்கி யுழல்பவருமாகிய இவர்கள் புல் நுனியிலிருக்கும் பனித்துளி சூரிய கிரணத்தால் உலர்ந்துபோவதுபோல், கூற்றுவனால் உயிர் நடுக்குற்றிறந்து கடத்தற்கரிய கொடிய அசுசியாகிய நரகக்கடலிலே வீழ்வர்.

ஏ பார்த்த! இந்த அசுர சம்பத்துடையோர் தங்களையே மேலானவர்களாக மதித்துப் புகழ்ந்து, உண்மையான சாதுக்களைச் சிரேஷ்டராகப் பாராட்டமாட்டார்கள். பழைய வேதங்களில் கூறப்பட்ட விதிகளைக் கைக்கொள்ளாமலே யாகங்களைச் செய்யாநிற்பர்.

நிலையான களிப்பும், பலமும், காமாதிகளும், நான் என்கிற அகங்காரமும் பொருந்தியுள்ள இவர்கள் தம்மவர்கள் யாவரிடத்தும் எனது சுபாவத்தை அன்னியமாகக் கருதிக்கொண்டு துவேஷத்தையே செய்யா நிற்பர்.

(பரமேசுவரராகிய உமது கருணையால் இந்த அசுர சுபாவமுடைய மாந்தர்க்கு ஒருகாலத்தில் நற்கதி கிடைக்காதோ என்ற அர்ச்சுனன் சங்கைக்குப் பகவான் அருளிச்செய்கின்றார்.)

ஏ அரசனாகிய பார்த்த! மானிடர்களில் அதமரும், பிறர்க்குக் குரூரமான தீங்குகளைச் செய்வதில் அரவத்திற்கொப்பானவருமாகிய இந்த அசுர சம்பத்துடையோரை ஒழியாத துன்பங்கள் வந்து சேரும். யானே அவர்களைக் கீழான யோனிகளாகிய புற்றுகளில் அடிக்கடி புகும்படி வீழ்த்துவேன்.

இவ்வாறு வியாக்கிரசர்ப்பாதிகளாகிய அசுர யோனிகளை யடைந்த இவர்கள் விவேகஞானமடையும் வழியின்மையாலே நற்கதிக்கேதுவான வேதமார்க்கத்தை யடையாமல் கொடிய நரகங்களில் சுழன்று திரிந்து வருந்தா நிற்பர்.

ஒருவரை எப்போதும் அதம யோனிகளில் ஜனிக்கும்படிச் செய்வதும், எப்போதும் நரகத்தில் உழலச்செய்வதும் ஆகிய இவைகள் வரும் வழிகள் மூன்றுள. அவற்றை ஒருமுறை கிரமமாகப் போதிக்கின்றேன் கேட்பாயாக.

ஏ பார்த்த! விஷய போகங்களிலுண்டாகும் பிரீதியாகிய காமம், தன்னுடையதை யின்னொருவர்க்குக் கொடுக்க மனம் பொருத குணமாகிய உலோபம், சுடுகின்ற அக்னிக்குச் சமதையாகிய கோபம், இந்த மூன்றுமே



ஒருவனுக்கு நரகத்திற்கும் நாசத்திற்கும் காரணமாகும். ஆதலினால் இவை மூன்றையும் விட்டொழித்தோர் சர்வ அநர்த்தங்களினின்றும் நீங்குவதாகிய நிரதிசயானந்த மயமாகிய மோக்ஷத்தை யடைவார்கள். சாத்திரங்களில் அந்தந்த அதிகாரிகளுக்கு விதித்துள்ள விதி நிஷேதங்களின்படி நடக்க வேண்டுமென்ற விருப்பத்தை விட்டுத் தம் மனம்போன வழியே நடவா நிற்பவர்கள், இகலோக பரலோகங்களில் அடையக்கூடிய சுகங்களையும், சித்தசுத்தியையும், அதன் துவாரா அடையக்கூடிய முத்தியையும் அடையார்கள்.

ஏ பார்த்த! மேலே கூறப்பட்ட காரணங்களால், காரியா காரியங்கள் அனைத்தையும் அறிவதற்கு மார்க்கமாகிய சுருதியாதி சாத்திரங்களில் விதிக்கப்பட்ட மார்க்கத்திலேயே ஒரு தோஷமுங் கருதாமல் உனது அதிகாரித் தன்மைக்குத் தக்க தருமயுத்தம் முதலிய காரியங்களையே செய்வாயாக.

(அசுர சம்பத்துடையோர்களிடத்துள்ளனவாகக் கூறப்பட்ட குணங்களை நீக்கி, முக்கியமாய் காமம், உலோபம், கோபம் என்ற கொடிய மூன்று குணங்களையும் அடியோடொழித்து, சித்தசுத்திபொருந்தி சாத்திரங்களில் கூறப்பட்ட விதி நிஷேதங்களின்படி ஒழுகினால் நற்கதி பெறலாம் என்பது கருத்து.)

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

(தொடரும்.) சீடன்.

---

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

187466

(238-ம் பக்கத் தொடர்ச்சி.)

**கறுப்:**—சந்தோஷமேன்?

**லாயர்:**—கூறுகிறேன். ஆவேசமானால் கண்களுக்குப் புலப்படுமேயன்றி நீதி ஸ்தலத்தில் வந்து நின்று நமக்கு விரோதமாய்ச் சாக்ஷிபகராது.

**கறுப:**—ஆனால் இந்த ஆவேசம் அப்படிச் செய்யுமென்றே நான் அஞ்சுகிறேன்.

**லாயர்:**—அப்படியானால் உனக்கென்னவோ சந்தேகமிருக்கிறது.

**கறுப்:**—ஆம். இப்போது உயிரோடு தோன்றும் அச்சுதன் பொய் யச்சுதனாயிருக்கலாகும்.

**லாயர்:**—பொய் அச்சுதனாயின் நமது இரகசியமெல்லாம் எப்படி யவனுக்குத் தெரியும்?

**கறுப்:**—அதில் ஒரு பாகமாவது தெரிந்துகொண்டிருக்கலாமென்று கருதக் காரணமிருக்கிறது.

**லாயர்:**—அப்படியாயின் எல்லாம் இராத்திரிக்குத் தெரிந்துவிடும்.

கறுப்பண்ணன் வியப்போடு இராத்திரிக்கு எப்படி தெரியும் என்று வினவினான். அதன்மேல் லாயர் தனக்கும் அச்சுதன் என்று தன் வீட்டிற்

குக் கடந்த இரவு வந்தவனுக்கும் நடந்த விவகாரங்களையும் கடைசியில் அவனும் தானும் இரவு ஒன்பது மணிக்குத் தன் ஆபீஸில் சந்திப்பதாய்ச் செய்துகொண் டிருக்கும் ஏற்பாட்டையும் கூறினான்.

கறுப்:—ஏதோ சூது நடந்திருக்கிறது என்று இப்போது உனக்குத் திருப்தியாய்த் தெரிகிறதா?

லாயர்:—அதைப்பற்றி யெனக்கொன்றும் தெரியாது. இதை யெப்படியும் நான் கண்டுபிடித்துவிடுவேன். அந்த உருவம் யார் என்னவென்று எனக்கொன்றும் தெரியாது. ஆயினும் அது அச்சுதனுடைய ஆவேசமென்றே பெரும்பாலும் நம்புகிறேன்.

கறுப்:—நீ ஆவேசங்களுக்குப் பயபபடுவதில்லையே?

லாயர்:—நான் இவ்வுலகில் பயப்படுவதெல்லாம் நியாயஸ்தலத்தில் வந்து நின்று எனக்கு விரோதமாய்ச் சாக்ஷி கூறத்தக்க மானிட உருவங்களுக்கே. ஒரு ஆவேசம் அப்படிக் கூறாது. அதனால் நமக்கொரு கெடுதியும் நேரிடாது.

கறுப்:—இப்போது நாம் கண்டது நமக்குக் கெடுதி விளைவிக்கக்கூடிய மாமிச தேகமுடைய உருவமே யென்று நான் நம்புகிறேன்.

லாயர்:—மலையாளி இரவு சரியாய் எட்டுமணிக்கு என் ஆபீஸில் வந்திருக்கும்படி திட்டம் செய்துவிடு.

கறுப்:—அவனை யேன் வரச்சொல்லுகிறாய்?

லாயர்:—அவனைக்கொண்டு அந்த ஆவேசத்தைப் பிடிக்கச்செய்ய.

கறுப்:—அவன் வரமாட்டான். அவன் தைரியத்தை யிழந்துவிட்டான். அவன் தவறிவிடுவான். நான் வருகிறேன்.

லாயர்:—“வேண்டாம், நானே அந்த ஆவேசத்தைச் சந்திக்கிறேன்” என்றான்.

லாயருக்குக் கருப்பண்ணன்மேல் சந்தேகம் உண்டாய்விட்டது. தானும் மலையாளத்தானும் இருட்டில் கட்டிப் புரண்டுகொண்டிருந்த போது தீபத்தோடுவந்த கருப்பண்ணன் கீழிருப்பவன் மலையாளியென்று தெரிந்தபின்பாவது உடனே யிருவரையும் விலக்காமலிருந்ததால் “இவர்கள் இருவரும் இப்படியே யொருவரை யொருவர் கொன்று இருவரும் மடியட்டும். அச்சுதன்போல் இவர்களும் மடிந்தால் பிறகு நமது இரகசியத்தை யறிந்தவர்கள் யாருமில்லையென்று கருப்பண்ணன் தீர்மானித்துக்கொண்டே பேசாமலிருந்தான்” என்று லாயர் நன்றாய் உணர்ந்துகொண்டான்.

கறுப்பண்ணன், ஆவேசத்தை நீ தனியே சந்திப்பது ஆபத்து என்றான். அதற்கு லாயர் “நான் தகுந்த எச்சரிக்கையோடுதா னிருப்பேன்” என்றான்.

கறுப்:—அந்த ஆவேசம், கடைசியில் கள்ளவேடந் தரித்த ஒரு போக்கிரியாயிருந்தால், இரவில் உன்னிடம் வரும்போது தானும் தக்க எச்சரிக்கையோடுதான் வரும் என்று எண்ணிக்கொள்.



லாயர்:—“எப்படியாயினும் வரட்டும். மனிதனேனும் சரி, ஆவேசமேனும் சரி; இப்போது முன்னாடி யிவ்வளவு விஷயங்கள் தெரிந்தமட்டில் நான் தக்கபடி சர்வ ஜாக்கிரதையோடேதான் இருப்பேன்” என்றான். உடனே இரண்டு துஷ்டர்களும் அவரவர் மனையை நோக்கிப் பிரிந்து சென்றார்கள்.

அன்றையதினம் முழுதும் லாயர் ஆவேசத்தைச் சந்திப்பதற்காக மிக்க ஜாக்கிரதையான ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருந்தான்.

இதற்கிடையில் நமது ஆனந்தஸிங் சும்மாயில்லை. அவன் பவானியின் உளவால் கறுப்பண்ணன் வீட்டிற்குள் நினைக்கும்போது செல்லும் அனுகூலமடைந்தான். அவன் அம்பாலிகையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்துகொண்டிருந்தான். அவள் அந்த வீட்டிற்குள்ளாகவே யெங்கோ ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்று அவனுக்குச் சந்தேகம். மேலும் அவ்வீட்டில் கள்ள அறைகள் இருக்கின்றனவென்று அம்பாலிகை கூறினாள்.

அம்பாலிகை இறந்துபோனாள் என்ற சம்பவத்தின் பின் வீட்டிலிருந்த ஆட்கள் எல்லாம் மாற்றப்பட்டு புதிதாய் அமர்த்தப்பட்டார்கள். அதிலும் முக்கிய காரியஸ்தியா யமர்த்தப்பட்டவள் மலையாளியால் கொண்டுவரப்பட்ட குட்டியாச்சி என்ற ஒரு மலையாளமாது.

வீட்டின் ஓர் பாகத்தில் யாரும் பிரவேசிப்பதில்லை. அப்பாகத்தைச் சோதிக்கவேண்டுமென்று பவானிக்கு மிக்க ஆவல். அவள் பன்முறை யப்பாகத்திற்குச் செல்ல முயன்றாள். ஆனால் எப்போதும் மலையாளத்தான் இவள் பின்னால் பூனைபோல் வந்துகொண்டே யிருந்தான்.

பவானி நெடுநாள் அங்கு இருப்பவளாகையால் எந்த இடத்தில் இரகசிய அறைகளிருக்கின்றன வென்பது அவளுக்குத் தெரியும். அதோடு அங்கு இரகசிய வழியிருக்கிறதென்றும், அந்த வழி புத்தகசாலையிலிருக்கிறதென்றும் அவள் அறிவாள்.

கறுப்பண்ணனும் லாயரும் சவக்கிடங்கிற்குச் சென்றதினம் மலையாளத்தான் எதற்காகவோ வீட்டைவிட்டு வெளிச் சென்றிருந்தான். அவன் வீட்டைவிட்டுப் போவது மிக்க துர்லபம். ஆகையால் இதுவே சமயமென்று பவானி தீர்மானித்துக்கொண்டாள்.

அச்சமயம் ஆனந்தஸிங் அங்கு வந்திருந்ததால் பவானி அவனைப் புத்தகசாலையிலிருந்து வெளியனுப்பிவிட்டுச் சற்றுநேரம் கழித்து மலையாளி வீட்டிலில்லை யென்றறிந்தே புத்தகசாலைக்குச் சென்றாள்.

ஆனந்தஸிங் வீட்டைவிட்டு வெளிச்சென்றவன் மறுபடி யொருவர்க்கும் தெரியாமல் உள்ளேவந்து நிழலைப்போல் தன் பிரியப்படி புழங்கத் தொடங்கினான். முற்காலங்களில் மாளிகைகளில் கள்ளக்கதவுகள் உள்ளனவென்றும் அவற்றைப் பெரிய பளுவான சாமான்களால் மறைத்துவைப்பது வழக்கமென்றும், அல்லது சுவர்களின்மேல் தைக்கப்பட்டிருக்கும்

சித்திரவேலை செய்த பலகைகளில் அவ்வழிகள் இரகசியமாய் மறைத்து வைக்கப்பட்டிருப்ப துண்டென்றும் பவானி கதைகளில் வாசித்திருக்கிறாள். ஆகையால் புத்தகசாலையில் மிக்க சாக்கிரதையோடு தேடத் தொடங்கினாள்.

சுமார் ஒருமணிநேரம் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை. சற்றுநேரம் சிந்தித்துக்கொண் டிருந்தாள். அச்சமயம் அங்கிருந்த சாளரத்தைச் சுற்றியிருக்கும் பலமான மர எழுதகத்தின்மேல் தோளைவைத்துச் சாய்ந்துகொண் டிருந்தாள். அப்போது அப்பலகைகளின் சந்திலிருந்து புஸ் என்று காற்று அவள் தோளில் பட்டது. முதலில் இது வெளியிலிருந்து சந்துகளில் நுழைந்துவந்ததென்று எண்ணினாள். சற்றுநேரத்திற்குள் கட்டிடத்தின் உறுதி அவ்வாறு காற்று நுழையக்கூடிய மாதிரியானதல்லவென்று அவள் மனதிற்பட்டது.

அதனால் காற்று வருகிற இடத்திலிருந்து கையைக் கீழும் மேலும் ஏற்றித் தடவிப்பார்த்தாள். கடைசியில் நீளமான ஒரே சிறு சந்தின் வழியாய்க் காற்று வருகிறதென்று அறிந்துகொண்டாள். சுமார் அரைமணி நேரம் தேடியும் கள்ளக்கதவைத் திறக்கும் உளவகப்படவில்லை.

கடைசியில் அது தற்செயலாய் அகப்பட்டது. எப்படியெனில், அவள் ஒரு சோபாவின்மேல் நின்றுகொண்டு அம்மர எழுதகத்தின்மேல் சாய்ந்துகொண் டிருக்கையில் திடீலென்று கால் நழுகவே சட்டென்று மர எழுதகத்தைக் கெட்டியாய்ப் பிடித்தாள். உடனே அந்த எழுதகப்பலகை முழுமையும் ஒரு கதவுபோல் திறந்துகொண்டது.

அந்தோ அச்சமயம் கூர்மையான இரண்டு கண்கள் தன் செய்கை முழுமையும் கவனித்துக்கொண்டிருப்பதை யவள் அறியாள்.

எப்படியெனில் அச்சமயம் வெளியிற் சென்றிருந்த மலையாளி வீட்டிற்கு வந்துவிட்டான். பவானியை வீட்டின் மற்ற பாகங்களில் காணாததால் புத்தகசாலைக்குப் பூனைபோல் சென்றான். அங்கு பவானியைக் கண்டதே திரை மறைவில் மறைந்துகொண்டு அவள் செய்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. இவளுடைய இரகசியங்களையெல்லாம் தான் கண்டுபிடித்துவிட்டதாய் மிக்க சந்தோஷமடைந்தான். அச்சமயம் அவளைத் தடைசெய்யாது அவள் அறிந்துகொள்வதெல்லாம் அறிந்துகொள்ளட்டுமென்று கவனித்துக்கொண்டிருந்தான்.

அவன் கருத்தாவது, "இவளைக் கொன்றுவிட இதே சமயம். ஏனெனில் இப்போது இவள் இரகசிய விடத்திற்குச் செல்லும் பாதையை யறிந்துகொண்டாள். அங்கே யிவள் செல்லட்டும். அங்கேயே யிவளைச் சரிப்படுத்தி விடுவது மிக்க உத்தமம். அங்கு இவள் என்ன கூச்சலிட்டபோதிலும் வெளியே கேட்காது. அங்கு இவள் கொல்லப்பட்டால் சங்கதி வெளியில் வராது" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டே மௌனமாய் அவளைக் கவனித்துக்கொண் டிருந்தான். (தொடரும்.)

**ஆரணி குப்புசாமி முதலியார்.**



## அறிவிக்கை.

நமது காரியஸ்தர்கள் இருவரும் இப்போது இங்கு வந்துவிட்டார்களாதலின் இனி ஆனந்தபோதினியில் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நமக்கு நேராக எழுதிக்கொள்ள விரும்புகிறோம். **பத்திராதிபர்.**

"ஆனந்தபோதினி."

*   *   *   *   *

## பிறநாடுகளில் பத்திரிகைப் பெருக்கம்.

நமது நாடுகளில் ஒரு பத்திரிகையின் சந்தாதாரர்களின் தொகை பதினாயிரத்துக்கு மேற்பட்டுவிட்டால் அப்பத்திரிகையின் அதிஷ்டத்தை நினைத்து மற்ற பத்திரிகைகள் பெருமூச்சு விடுவது சகஜமாயிருக்கிறது. ஆனால் அமெரிக்கா முதலிய நாடுகளில் உள்ளதுபோல் நம் நாட்டில் பத்திரிகைப் பெருக்கம் எக்காலத்தில் ஏற்படுமோ தெரியவில்லை. அமெரிக்காவிலுள்ள சில சஞ்சிகைகளின் சந்தாதாரர் தொகை ஒரு பத்திரிகையில் காணப்படுகிறது. அவற்றில் சில :—பின்வருமாறு.

| | |
|---|---|
| சனிக்கிழமை ஈவினிங் போஸ்டு | 21,00,098 |
| லேடீஸ் ஹோம் ஜர்னல் | 17,99,002 |
| பிக்டோரியல் ரிவியூ | 17,65,430 |
| அமெரிக்கன் மாகஸின் | 16,04,433 |
| உமன்ஸ் ஹோம் கம்பானியன் | 14,67,509 |

நிகழும் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள பிரபல பத்திரிகைகளின் சந்தாதாரர் தொகை பின்வருமாறு :—

| | |
|---|---|
| நியூஸ் ஆப் தி வேர்ல்டு. | 30,00,000 |
| டெயிலி மிர்ரர் | 1002,882 |
| டெயிலி கிரானிகில் | 10,00,000 |
| ஜான் புல் | 7,16,255 |
| பஞ்ச் | 10,00,000 |
| ஆன்ஸர்ஸ் | 4,78,621 |
| லேடீஸ் ஜர்னல் | 4,42,631 |

*   *   *   *   *

காபிகுடிக்கிறவர்கள் ரிஷிகள் ஆகமுடியாது, இந்தக்காலத்து மாணவர்கள் காப்பியை மிதமிஞ்சிக் குடிக்கிறார்கள். இதனால் நூற்றுக்கு எண்பதுபேர் வீதம் இளமையிலேயே சாகிறார்கள் என்று கர்னல் கணபதிராய் சில தினங்களுக்கு முன் சென்னையில் செய்த பிரசங்கம் ஒன்றில் கூறினார். கணபதிராயர் பெரிய ஆங்கில வைத்தியர், ஐ. எம். எஸ்.

*   *   *   *   *

உபவாசம் இருப்பதால் மக்கள் இளமை யடையலாமென்று சிக்ககோ சர்வகலாசாலையில் உடல் நூற் பண்டிதரான அறிஞர் கார்ல்ஸன் கூறுகிறார்; மூன்று வருஷம் ஆராய்ச்சி செய்து அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்; பதினைந்து நாள் உபவாசம் இருக்கவேண்டுமென்று அவர் கூறுகிறார்; அவரது முறையால் சிலர் இளமைபெற்றிருக்கிறார்கள்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

**ரக்தாக்ஷி ஹு மாசி மீ—கலியுகாதி 5026 சாலிவாகனம் 1847,**
**பசலி 1334—கோல்லமாண்டு 1099-1100—ஹிஜரி 1843,**
**இங்கிலீஷ் 1925 ஹு பிப்ரவரி மீ—மார்ச்சு மீ**

| மாசிமீ | பிப்ரவரி | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | வியா | சது59-35 | உத்17-18 | ம17-18சி | விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 13 | வெ | பஞ்58-38 | அஸ்-18-43 | அ18-43சி | சுபமுகூர்த்தம் செய்ய |
| 3 | 14 | சனி | சஷ்56-35 | சித்18-55 | ம18-55அ | தானியம் இருப்பு வைக்க |
| 4 | 15 | ஞா | சப்53-20 | சுவா18-8 | சி18-8மர | சர்வமுகூர்த்தங்கள் |
| 5 | 16 | திங் | அஷ்49-8 | விசா16-8 | மர18-8சி | திஷ்ரோஷ்டகா |
| 6 | 17 | செ | நவ 43-53 | அனு13-13 | சி13-13ம | இராமதாஸ் நவமி |
| 7 | 18 | புத | தச37-53 | கேட்9-18 | சித்9-18ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 8 | 19 | வியா | ஏ31-10 | மூல4-40 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 9 | 20 | வெ | துவா24-0 | பூரா2-3<br>உத்54-5 | பிர2-3சித் | பிரதோஷம், அவமாகம், |
| 10 | 21 | சனி | திர16-40 | திரு48-43 | சித்60 | |
| 11 | 22 | ஞா | ச●9-35 | அவி43-35 | ம43-35சி | |
| 12 | 23 | திங் | அமா2-55<br>பிர57-18 | சதை39-15 | சி39-15ம | |
| 13 | 24 | செ | து52-38 | பூரட்36-3 | மர36-3அ | |
| 14 | 25 | புத | திரி49-38 | உத்34-10 | சி34-10ம | |
| 15 | 26 | வியா | சது48-15 | ரேவ33-55 | சி33-55அ | |
| 16 | 27 | வெ | பஞ் 48-45 | அசு35-35 | அ35-35சி | |
| 17 | 28 | சனி | சஷ்51-13 | பர39-8 | சி39-8அ | |
| 18 | 1 | ஞா | சப்55-20 | ※கிரு44-15 | சித்60 | கிருத்திகை |
| 19 | 2 | திங் | அஷ்60 | ரோ50-50 | அமி60 | பிரயாணம் விலக்கல் |
| 20 | 3 | செவ் | அஷ்0-50 | மிரு58-15 | சி58-15ம | யாத்திரை விலக்க |
| 21 | 4 | புத | நவ7-8 | திரு60 | சித்60 | திருதினஸ்பிருக் |
| 22 | 5 | வியா | தச13-40 | திரு6-0 | மர6-0அ | திருதினஸ்பிருக் |
| 23 | 6 | வெ | ஏ19-58 | புன13-25 | சி13-25ம | சீமந்தம் காதுகுத்த |
| 24 | 7 | சனி | து25-20 | பூசம்20-10 | சி20-10ம | நரசிம்ஹ துவாதசி |
| 25 | 8 | ஞா | திர29-33 | ஆயி24-50 | சி24-50ம | நவக்கிரகசாந்தி செய்ய |
| 26 | 9 | திங் | சது32-15 | மகம்29-55 | ம29-55சி | மாசிமகம், காமதகனம் |
| 27 | 10 | செவ் | ○33-38 | பூரம்32-43 | சி32-43அ | பௌர்ணமி, ஒலிபண்டிகை, மாவோங்க |
| 28 | 11 | புத | பிர33-30 | உத்34-15 | அ34-15ம | பால்குணபகுளம், அவமாகம், வசந்தோற்சவா |
| 29 | 12 | வியா | துதி32-20 | அஸ்34-38 | சித்60 | தான்யம் அறுக்க,வியாதியஸ்தர் மருந்துண்ண |
| 30 | 13 | வெ | திரி39-3 | சித்33-53 | சித்60 | ஷிவேஷகம், மீனரவி 42-50 சர்வமுகூர்த்தம் |

(1925ஹு மார்ச்சுமீ — printed vertically beside rows 18–30)

| | | | |
|---|---|---|---|
| | செ | | |
| சூரி | 10உ-கும்-புத<br>15 ,, கும்-சுக்<br>26 ,, மீன-புத<br>29 ,,ரிஷ-செ | | ராகு |
| கே<br>புத<br>சுக் | | | |
| குரு | | சனி | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.

**100 ரூ. இனாம் Dr. S. P. மன்மதகுளிகை. 100 ரூ. இனாம்**

விலையில் குறைந்தது குணத்தில் மேலானது தாதுபுஷ்டியில் சிறந்தது 20 நாள் சாப்பிட்டு குணமில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 100 ரூ. இனாம்.

இரத்தத்தை சுத்தம்செய்து நரம்புக்கு முறுக்கத்தை கொடுத்து நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி பசியை அதிகரிக்கச்செய்து இளைத்து கிழத்தன்மையான வுடலை திடகாத்திரமாகச் செய்து நீங்காத யௌவனத்துடன் எப்போதும் குறையாத பலமும் இல்வாழ்க்கையில் ஆனந்தத்தை உண்டாக்கும். ஒருதரம் வாங்கிப்பாருங்கள்.

20 மாத்திரை பாட்டல் 1-க்கு ரூ. 2 ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு மட்டும் வி. பி. சார்ஜ் இல்லை. அன்னிய நாடுகளுக்கு வி. பி. சார்ஜ் உள்பட முன்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர் S. P. & Co., பாண்டமங்கலம் P. O. (*via*) புகளூர், S. I. Ry.

## ஸ்ரீ குமாரதேவர் சாஸ்திரக் கோவை.

ஸ்ரீ குமார தேவர் ஓர் பிரசித்தி பெற்ற மகான். இவர் அரசனாகப் பிறந்து சில நாட்கள் அரசு புரிந்து பிறகு துறவடைந்து பேரையூர் சாந்தலிங்க சுவாமிகளிடம் உபதேசம் பெற்று விருத்தாசலத்தில் வசித்திருந்தவர் இவர் பரம சிவத்தால் தாகவிடாய்த் தீர்க்கப் பெற்று, சம்பந்த சுவாமிகளைப் போல் பெரிய நாயகி யம்மையால் பால் ஊட்டப்பெற்றவர். இவர் அனேக அற்புதங்களைச் செய்தவர். அவை யாவும் இந்நூலிலுள்ள இவர் சரித்திரத்தில் விவரமாகக் காணலாம்.

உலகோபகாரமாய் இம்மகான் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் இப்பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்தியங்கரை சேர விரும்புவோர் ஒவ்வொருவரும் அவசியம் பக்தியோடு கற்க வேண்டியவைகள். இவர் வாக்கு அருள் வாக்காகையால் இவர் அருளிய நூல்களை வாசிப்போர் ஈசுவரன் அருள் பெறுவது நிச்சயம்.

இச்சாஸ்திரக் கோவை இதுகாறும் சுத்தப் பிரதியாய் வெளிவிடப் படவில்லை. இதில் அடங்கி யுள்ள சாஸ்திரங்கள்:—

1. ஸ்ரீ குமார தேவர் சரித்திரம்.
2. மகா ராஜா துறவு
3. சுத்த சாதகம்
4. விஞ்ஞான சாரம்
5. அத்துவித உண்மை
6. பிரம்மானு பூதி விளக்கம்
7. ஞான வம்மானை
8. வேதாந்த தசாவத்தைக் கட்டளை
9. வேதாந்த தசகாரியக் கட்டளை
10. சகச நிட்டை
11. உபதேசசித்தாந்தக் கட்டளை
13. சிவ தரிசன அகவல்
14. ஆகம நெறி யகவல்
15. வேத நெறி யகவல்
16. பிரம்மானுபவ அகவல்
17. ஞான வமமானை
18. பெரிய நாயகியம்மன் பதிகம்.

இது நாணயமான கடிதத்தில் சுத்தமாக அச்சியற்ப்பட்டு காலிகோ பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூபா 1—0—0. ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-1925 வரையில் விலை அணா 12.

## பெரியபுராணவசனம் விலை ரூபா 2-8

விமலன் அல்லது விதியின் வெற்றி அணா 4.
கண்ணபிரான் அல்லது உலக இருளை நீக்க வந்த உத்தமர் அணா 4.
சாது மந்திரி கதை அணா 4.

இந்த மூன்று புஸ்தகமும் இதே மாதிரியான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

விலாசம்:— ஆனந்தபோதினி, தபால்பெட்டி, நெ. 167, மதராஸ்.

# கைவல்ய நவநீதவசனம்

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய பகவான் அனாதியே ஆணவமலத்தில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்களுக்குக் கருணையோடு தநுகரண புவன போகங்களை யளித்தருளினார். இந்த ஆன்மாக்கள் மாயையினின்றும் விடுபட்டு துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியுமாகிய மோக்ஷமின்பெய்தும் பொருட்டே கருணாநிதியாகிய ஆண்டவன் அவ்வாறு செய்தருளினார். மோக்ஷ மார்க்கத்தை யறிவிக்கும் வேதத்தையும் அருளியிருக்கிறார்.

வேதமோ யாவராலும் உணரற் பாலதன்றாகும். ஆதலில் மகான்களாகிய நம் முன்னோர்கள் வேதசாரத்தைத் திரட்டி அதிகாரிகளின் பேதப்படிப் பல நூல்களை யியற்றியுள்ளார்கள். அவற்றில் ஸ்ரீமத்-தாண்டவராய சுவாமிகள் இயற்றி யருளிய கைவல்ய நவநீதம் என்ற நூல் மோக்ஷமார்க்கத்தைப் பூரணமாய் விளக்கிக்காட்டும் நூலாகும். இதில் கூறப்பட்டுள்ள முத்தி மார்க்கம், ஈசுவர பக்தியுடைய எவருக்கும் (ஜாதி மத பேதமின்றி) பயன்படக் கூடியதாகும். மூலநூல் கவிகளாயுள்ளது. அந்த நூலுக்குச் சிலர் உரை யெழுதியுள்ளார்கள். ஆனால் கோயிலூர் ஸ்ரீமத்-பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய உரையே சால சிறந்ததென்று மதிக்கப்படுகிறது.

ஆயினும் இரகசிய இலக்கண ஆராய்ச்சியுடையார்க்கே இவை நன்கு விளங்கும். ஆதலில் சாதாரணக் கல்வியுடையோரும் வாசித்துணர்ந்து பயனடைய வேண்டுமென்றே வசனரூபமாய் நமது ஆனந்தபோதினி சஞ்சிகையில் வெளியிடப்பட்டது இப்போது புத்தக ரூபமாய் வெளிவந்திருக்கிறது. இதில் வாசிப்போர்க்குண்டாகக்கூடிய ஐயங்களைத்தும் தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறபடியால் கூடியவரையில் இன்னொருவரிடம் சென்று கேட்கவேண்டிய அவசியமின்றியே சொல்ப கல்வி யுடையோரும் இதை வாசித்துணர்ந்துப் பயன் பெறலாகும். நல்ல கடிதத்தில் சுத்தமாய் அச்சியற்றப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1 8 0.



மூன்றாம் பதிப்பு! **தினகரசுந்தரி** விலை ரூபா 1.

## ஓர் செல்வச் சீமாட்டியின் அதிசயமான கதை

இக் கதாநாயகி ஆண் வேடந்தரித்து, தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய சோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விடுவது மிக்க வியப்பினும் வியப்பாயிருக்கும்.

இக்கதா நாயகியின் குற்றமற்ற இரகசியங்களை வெளியிடுவதாய்ப் பயமுறுத்தி இவளைச் சோரஞ்செய்ய முயற்சி செய்யும் துஷ்டர்களை இவள் தந்திர சாமர்த்தியத்தால் வென்று அவர்கள் வெட்கியோடும்படிச் செய்தல் மிக்க வீரத்தனமாயும் வேடிக்கையாயுமிருக்கும்.

தான் பலவித ஆபத்துகளில் சிக்கியபோதும் தன் சுய தந்திரத்தால் தன் கற்பிற்குப் பழுது வராமல் தப்பித்துக்கொண்டு தன் கணவனுக்கு மனம் நோகாதபடிக்கு அவனுக்கு நேரிடவிருந்த அவமானத்தினின்றும் அவனைக் காப்பாற்றுவதையும், மாமியார், மைத்துனர், நாத்திமார் இவர்களை யன்போடு ஆதரிப்பதும் இவளுடைய கற்பின் உறுதியையும், குடும்ப விஷயத்திலிருக்கும் உயர்தரமான நடக்கையையும் நன்கு விளக்குகிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



# ஞானக் கோர்வை

சிவவாக்கியர், பட்டினத்து பிள்ளையார் சரித்திரம், ஷை முதலாவது கோயிற்றிருவகல், 2-வது கோயிற்றிருவகல், 3-வது கோயிற்றிருவகல், 4-வது கோயிற்றிருவகல், ஷையார் திருவேகம்பமாலை, ஷை திருத்தில்லை, ஷை திருச்சங்காடு, ஷை கைலாயம், ஷை பொது, ஷை வெண்பா, ஷை உடற்கூற்றுவண்ணம், ஷை திருவள்ளுவர் ஞானம், ஷை முதல்வன் முறையீடு, ஷை அருட்புலம்பல், ஷை இறந்தகாலத்திரங்கல், ஷை நெஞ்சொடு புலம்பல், ஷை பூரணமாலை, ஷை சட்டமுனி ஞானம், ஷை ஞானம், பத்திரகிரியார்சரித்திரம், ஷையார் மெய்ஞ்ஞானப்புலம்பல், பாம்பாட்டிசித்தர்பாடல், இடைக்காட்டுசித்தர் பாடல், அகப்பைசித்தர் பாடல், குதம்பைசித்தர் பாடல், கடுவெளி சித்தர் பாடல், சிவயோகசாரம், அகஸ்தியர் ஞானம் 9, ஷையார் ஞானம் 6, ஷை ஞானம் 16, அழுகணிசித்தர் பாடல், நந்தீஸ்வரர் பூஜாவிதி, இராமதேவர் பூஜாவிதி, கொங்கண நாயனார் வாலைக்கும்மி, உரோமரிஷி ஞானம், திருமூலநாயனார் ஞானம், கருவூரார் பூஜாவிதி, ஞானசர நூல் சாஸ்திரம், சிவானந்தபோதம், விஞானந்தபோதம், நெஞ்சறிவிளக்கம், ஞானயேற்றம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானக்கும்மி, சுப்பிரமணியர் ஞானம், காயக்கப்பல், அகஸ்தியமுனிவர் ஞானம் 13, வால்மீகர் சூத்திரஞானம் 16, சிவநாமாவளித்திரட்டு இவையாவும் அடங்கியுள்ளன. உயர்ந்த காலிகோ பயிண்டு செய்திருக்கின்றது. இதன் விலை ரூபா 1-4.

## காதற்கலி வெண்பா.

இதுவரையில் எழுதப்படாத ஓர் காதற்கவி. இக்கவிவெண்பாவில், சொற்சுவையும் பொருட்சுவையும் ததும்புவதோடு வாசிப்பவருள்ளத்தைக் காதற்றரையில் மூழ்குவித்து பரவசமாக்குகிறது. வெகு இனிமையாக எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. விலை அணா 4. தனிப்புத்தகம் வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



## 6 சாமி உருவ ரப்பர் ஸ்டாம்புகள்.

(இந்த) ஸ்டாம்புகள் நூதனமாக ஜெர்மெனியிலிருந்து ஸ்பெஷலாக வரவழைத்திருக்கின்றோம். இவைகளை கார்டுகள், கவர்கள், லெட்டர் பேபர்களில் அச்சடிக்க வெகு அழகாயிருக்கும். இவ்விடம் செய்வதாக யிருந்தால் ஒவ்வொரு ஸ்டாம்பு 1 8 0 ஆகும்.



உருவங்கள் அழகாக செதுக்கியிருப்பதால் வெகுநாளைக்கு தேயாமலும் எத்தனை முறை உபயோகித்தாலும் உருவங்கள் கெடாமலிருக்கும். விக்னேஸ்வரர் பரமசிவன், பிரம்மா, ஹனுமார், ஸ்ரீ இராமர், ஸ்ரீகிருஷ்ணன ஆக தனிதனி 6 சாமி ஸ்டாம்பு இங்கியூற்றிய பாட் சேர்ந்த பெட்டி 1-க்கு ரூபா 1.

தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

அரிய துப்பறியும் நாவல் ! வெளி வந்து விட்டது !!

## சோமசுந்தரம் அல்லது சுகந்த விலாச மகசியம் விலை ரூ. 1.

| | ரூ. அ | | ரூ. |
|---|---|---|---|
| திருக்கழுக்குன்றத்துக் கொலை | ... 1 8 | பத்மநாபன் | ரூ. 0 14 |
| கமலநாதன் | ... 1 8 | மதிவீரன் | ... 0 14 |
| அமிர்த குமாரி | ... 1 4 | கபடசந்யாசி | ... 0 14 |
| சதானந்தர் | ... 1 4 | கலாசுந்தரி | ... 0 12 |
| கொங்குநாட்டரசி | ... 1 4 | ஞானனந்தன் | ... 0 12 |
| அமிர்தவல்லி | ... 1 4 | ரகுநாதன் | ... 0 12 |
| மதனகாந்தி | ... 1 8 | தனபாக்கியம் | ... 0 10 |
| குலசேகரன் | ... 1 0 | தாக்ஷாயணி | ... 0 6 |
| | | ஜெயசீலி | ... 0 6 |

செல்வம் அண்டு கம்பெனி, 480, சில்வர் தெரு, பரங்கிமலை.

---

### காந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது, ஐசுவரியம், ஆரோக்கியம், செல்வாக்கு ஆகிய



இவைகள் நிறைந்துள்ள பேழைகளைத் திறக்க வல்லதோர் மந்திரம் போன்றது. இந்நூல், இன்ன காரியங்கள் இன்ன இன்ன காரணங்களினால் செய்யவேண்டியதவசியமென்றும், அவைகளை இன்ன இன்ன விதமாகச் செய்யவேண்டுமென்றும் விவரமாகத் தெரிவிக்கிறது. ஔஷதப் பிரயோகமின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்க மடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் பிரபோதனைகளினால் தீர்த்துக் கொள்ளக் கூடிய பல வழிகளையும் இந்நூல் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பலவியாதிகளையும் காந்தசக்தியினால் ஸ்வஸ்தமாக்கலாம். புஸ்தகம் முழுதும் படங்கள் அடங்கியது. ரூ. 1.

### ஹஸ்தரேகை சாஸ்திரம்.

மேற்குறித்த சாஸ்திரம், வித்வான்களின் உதவியைக் கொண்டு



யாவரும் தெரிந்து கொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப் படுத்தப் பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத்தெரிந்து கொள்ளலாம். மேலும், இது நம்மைநாமே அறிந்து நம்மிடத்திலுள்ள குறைகளை நாமே நீக்கிக் கொள்ளச் செய்து, எவ்வித புத்தி வைபவங்களை நாம் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், எத்தொழிலை நாம் கைக்கொண்டால் விருத்த காரியசித்தியை அடையக் கூடுமென்றும் நமக்குத் தெரிவிக்கிறது. இம்மாதிரியான அரிய பெரிய நூல் இதுவரையில் நமது தேசத்தில் ஒருவராவது வெளிப்படுத்தவில்லை. விலை ரூபா 2 0 0

இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

## குசேலோபாக்கியான வசனம்.
(இரண்டாம் பதிப்பு.)

நான்கு சித்திரப்படங்களுடன் கூடியது.

வல்லூர் தேவராஜப்பிள்ளை யவர்கள் இயற்றிய குசேலோபாக்கியானச் செய்யுட்பொருளைத் தழுவி இவ்வசனம் செம்பாகமான நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. தெய்வபக்தி, குருபக்தி, ஞானம் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இல்லறவியல்பு, பதிவிரதைகளின் தன்மை, பிள்ளைகளைக் காப்பாற்றும் முறைமை, தந்தை மக்கட்குச் செய்யும் நன்றி, மக்கள் தந்தைக்குச் செய்யும் நன்றி, தரித்திரக் கொடுமை, செல்வச்சிறப்பு, செங்கோல் மன்னரியல்பு, கொடுங்கோல் மன்னரியல்பு, நற்சேவகரியல்பு, துர்ச்சேவகரியல்பு, மெய்ஞ்ஞானிகள் தன்மை, அஞ்ஞானிகள் தன்மை, மாணக்கர் இயல்பு, ஆசிரியரியல்பு, சிநேகவாஞ்சை, பள்ளிக்கூட சிநேகிதத்தின் உயர்வு, நன்னட்பின் தன்மை, தீநட்பின் தன்மை, செருக்கின்மையின் உயர்வு, தெய்வத்தின் திருவருட்டிறம், மெய்யடியார் விரைவில் மேன்மை யடைவரென்பது முதலிய பல நன்மையான விஷயங்களெல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்படுமென்பது உலகறிந்ததே. ஆண், பெண், பாலர், விருத்தர் ஆகிய எல்லோருக்கும் நற்போதனை செய்து அறிவை விருத்திசெய்வதில் இந்நூல் முதன்மைபெற்றதாகும். இவ்வசனமோ படிக்கப்படிக்க மனதை உருக்கிவிடும் இயல்பையுடையது. இது கிரௌன் 248-பக்கங்கொண்ட புத்தகமாக அச்சிடப்பெற்றிருக்கிறது.

இதன் விலை ரூபா 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

புதிய] **மாதவீ, மாதவன்,** [நாவல்

அல்லது.

ஓர் துணிகரமான, சாமார்த்திய, ரெயில்வேக்களவு.

இது ஒரு அருமை வாய்ந்த நாவல். இதில் கதா நாயகியாகிய மாதவி, தான் நன்றாக, ஆங்கிலம் பயின்றவளாயிருந்தும். தானொரு இந்து வென்னும் நிலைமையில் இலவலேசமும் மாறாததும், கதா நாயகனாகிய மாதவன், ஷீ, ஆர். ராலீகான். எனும். பிரபலக் கள்வனால். விலை யுயர்ந்த, ஆபரணங்களும் பணமும். களவாடப் பட்டு, அன்னிய. நாட்டில் நிரந்தர நிலைமையில் நிற்பதும். வாசிப்போரின் மனதில் மிக்க வியப்பபை யுண்டாக்கும். முதல் பாகம் விலை ரூபா 1.

M. PAUL, *Sessions Court, Tellicherry.*

---

### கலியுக பகவான் திருமலை சுவாமி சரிதம்.

இம்மஹான் இற்றைக்கு 148 வருஷங்களுக்கு முன் அவதரித்து நம் பரதகண்டத்திலுள்ள மாந்தர்களை உய்விக்குமாறு யாத்திரை செய்தவர். ஜாதிமதங்களின் உண்மைகளை விளக்கி, ஆசாரம், ஒழுக்கம், ஜீவகாருண்யம், பக்தி, ஞானங்களை உலகத்தவர்கள் அடையுமாறு தமது அபார சித்துத்தன்மைகளால் அறிவுறுத்தியவர். தமது அந்தியகாலத்தில் நூலத்தை விழ்த்தாவண்ணம் கிட்டைகூடி பரிபூரண தசையை அடைந்தவர். சகோதரசகோதரிகாள் "இம்மஹான் சரிதத்தை" ஒவ்வொருவரும் வாங்கிவாசித்து உண்மையை உணருமாறு எளிய நடையில் வசன ரூபமாக வெளியிட்டிருக்கின்றனன். விலை அணு 6. 1 டஜன் விலை ரூ. 4-2-0.

விலாசம்:—ஏகானந்த சாமியார்,
25, திருவேங்கட முதலி தெருவு, பெரியமெட்டு, மதராஸ்.

# ஞானசெல்வாம்பாள்

## அல்லது இரண்டு சகோதரிகள்.

(ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமிமுதலியா ரவர்களால் எழுதப்பட்டது.)

ஞானம்பாள் செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளே இந்த நாவலில் கதாநாயகிகள். இதில் கன்னிகைகள் மேலதிகாரமின்றி தங்கள் பிரியப்படி நடக்குமாறு விடப்படுவது, அன்னிய வாலிபரிடம் தாராளமாய்ப் புழங்கும்படி விடப்படுவதே நல்ல நாகரீகமென்று கருதுவது முதலிய ஆசாரங்களால் விளையும் தீங்குகள் அனுபவமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. அதோடு பெரும்பாலான கன்னிகைகள் உலக அனுபவமில்லாத அந்தப் பருவத்தில் தங்களுக்குத் தகுதியான கணவர்களைத் தாங்களே தேர்ந்தறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களென்பதும், அயோக்கியர்களது வஞ்சகவலையில் அவர்கள் எளிதில் சிக்கிக்கொண்டு தங்கள் வாழ்நாள் முழுமையும் பெருந்துன்பத்தை யனுபவிக்க நேருமென்பதும் இக்கதையால் நன்குவிளங்கும்:

இக்கதா நாயகிகளின் நடக்கைகளால் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் குணங்களைக் கைவிடாமல் நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகும் கன்னிகை முடிவில் நல்ல பலன்களையும் மேலான பதவியையும் அடைவாளென்பதும், அற்பபோகங்களிலும் படாடோப வாழ்க்கையிலும் இச்சை வைப்பவள் துன்பத்தையே யடைவாளென்பதும் தெளிவாய் நிரூபிக்கப்படுகிறது.

இக்கதையில் சம்பந்தப்பட்ட முக்கியமான ஆடவனாகிய தேவராஜன் என்பவனுடைய சரித்திரத்திலும், கிருஷ்ணராஜன் மச்சநாதன் என்பவர்கள் சரித்திரத்திலும் மிக்க ஆச்சரியமும் மனதை யடியோடு கவர்ந்துகொள்ளத்தக்க அபூர்வ சம்பவங்களும் நிறைந்திருக்கும். இரண்டு பாகமும் விலை ரூ. 4.

# MATERIA MEDICA

## தமிழ் மெடீரியா மெடிகா என்னும்

## அருமையான வைத்திய நூல்.

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்து கலப்பு விவர முறைகளைத் தமிழில் மிகவும் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு விளக்குகின்றது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக்குதவும் தோழன்' என்று அனைவோரும் நம்பலாம். வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்துகொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். வைத்தியர்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களிலும் வைத்தியர்களில்லாத ஊர்களிலும் இப்புத்தகம் மிகவும் அவசியமானது. ஆகவே ஆபத்துக்குதவும் சஞ்சீவி போன்ற இவ் வைத்திய புத்தகம், ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருந்தே தீரவேண்டுமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். இதில் குறித்துள்ள மருந்து முறைகளைத் தக்கபடி கையாளுவதனால், எல்ல நோய்களும் நீங்குமென்பது நிச்சயம். நல்ல காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபா 8

**இது ஒவ்வொரு வைத்தியரிடத்திலும் அவசியமாயிருக்கவேண்டியது.**

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

**இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?**




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

**விளம்பரம்.**

**இதைக் கண்ணுறும் கனவான்களே!**

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று, அபாரமான தத்துவத்தைத் தாக்கடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி வாங்கி சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே எமது மருந்தின் விசேட குணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன

தற்காலத்தில் பால்ய இச்சையாலும், இரத்தப் பெருக்காலும் உண்டான 20 வகை மேகரோகங்கள், குலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால்முடக்கு, ஒலோய்வு, பித்தவெப்பம், நெஞ்சுதொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேகஉளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலைசுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் நீர்மேகம்முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்தமான வியாதிகளைப் பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி அபரிமிதமான ரத்தவிர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகியபஸ்பம் வேறொன்றில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம் இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கி தேகதடிப்பு, நகக்கண்வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையானதென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும்தகும், மேலும் இதை நோய்உள்ளவரேதான் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானால் முழுதும் குணமாகிவிடும். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதிகளாவோம். அதாவது, யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்து பரோபகாரார்த்தமாக இதை வெளியிட்டோம். இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரத்திற்குப் பொன்மெடல், வெள்ளிமெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். நமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி ஜவாப்தாரியா யிருக்க காத்துக்கொண் டிருக்கிறோம், இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும்; எமது உண்மை நன்றாய் விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக டை லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியவைகொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச்செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆநந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரத்திற்குப் பத்தியமேகிடையாது. எந்தப்பண்டமும் நீக்குதலின்றி மருந்துசாப்பிடும்காலத்தில் வயிற்றிற்கு துரோகம்செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய்எடுக்கும். பச்சைப் பயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட ருப்பு, நெய் இவை அதிகமாக தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள், எருமைப்பால், பசும்பால் ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரே யானால் அது தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதிய ரத்தம் பாவி தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாதபடி ரொம்பவும் தேஜசாய்த் தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் எழுத முடியாது. இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூபா 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டு உள்பட ரூபா 4.

பினாங்கு, ஸிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா1—4—0 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட 5—8—0.

**சிங்கபூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாமல் மருந்து அனுப்பப்படாது.**

விலாசம்:—**லேகியம் டிபோ,**
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

## சர்வதேள்விஷசஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

**பட்டவுடனே விஷம் பறக்கும் !        அழுதவன் சிரிப்பான் ! !**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**



நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்கிளி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8    தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரு. 5 0 0    ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம். வர்த்தகருக்கு 100-க்கு 25-கமிஷன் கொடுக்கப்படும்.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167. மதராஸ்.

# சர்வமேக நிவாரணி தைலம்.

இந்த பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை காலை மாலை இருவேளையும் 10 நாளைக்கு உட்கொண்டால் வெகு நாளாய் திரேகத்தில் ஊரிய மேக ரோகங்கள், மேக வாய்வு, தனுர் வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு ரிணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்திமுதலிய கிரந்திபுண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள் நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். அநேக ஜனங்களின் துன்பத்தைநீக்கிச் சௌக்கியத்தைஉண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது, கடின பத்தியமின்றி பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும் பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளின்றி, சுகமாய் வியாதிகளைக் கண்டித்து சுகப்படுத்தக்கூடிய உண்மையான மருந்து.




புட்டி 1-க்கு விலை ரூபா 1-8-0.

# காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவா இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டை கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளுமையான வஸ்துவை சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் இவை முதலான வியாதிகளை நாலு தினத்தில் கண்டித்து கோழையை வெளியில் தள்ளி நன்றாய் தூங்கச்செய்யும். புட்டி 1-க்கு ரூபா 1.

## ஸ்ப்ளீனோபில்ஸ்—சுரக்கட்டிக்கு மாத்திரை.




இம்மருந்து சாதாரணமாய் முறைக்காய்ச்சல், குளிர்க்காய்ச்சல் முதலான விஷ சுரங்களை நிவர்த்திப்பதுடன் வயற்றிலுள்ள எத்தகைய சுரக்கட்டிகளையும் வெகு சுலபமாய் மற்ற இதர மருந்துகளைக் காட்டிலும் கரைத்துவிடும். இம்மருந்தின் உயர் குணங்களை இவ்விடத்தில் நற்சாக்ஷிகளுடன் வெளிப்படுத்துவதைக் காட்டிலும் ஒரு முறை உபயோகித்த ஒவ்வொருவரும் அவரவர்கள் சிநேகிதர்களுக்கு தெரிவிப்பதே இதன் பெருமை உலகிற்கு நற்சாட்சியாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 100 | மாத்திரைகொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா | 5 | 0 | 0 |
| 50 | ,, ,, ,, ,, ,, | 2 | 10 | 0 |

## மின்சார மோதிரம்.

இந்த மோதிரத்துள்ளிருக்கும்படியான மின்சாரக் கருவியின் சக்தி எக்காலத்திலும் அழிவிராது. அக்கருவி யிருக்குமளவும் அதன் சக்தி யிருக்கும். சிறியோர், பெரியோர் யாவரும் உபயோகிக்கலாம். ரூ. 1-8-0.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# கண்நோய் மருந்து.



கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும் மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம் இதை உபயோகித்தால் கண்ணாடி போட வேண்டியதில்லை புட்டி 1-க்கு அணா 8.

# கர்ண பிந்து.



காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தை 2-துளி காலை மாலைகளில் விட்டுவர காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.


## சர்வபடை சம்மான்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்தி சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள் ஒரே தடவையில் இந்த சர்வபடை சம்மான் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

# ஒட்டோலீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதை பிரமிக்கச் செய்து ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படிச் செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது இந்தநீங்காத வாசனையை உங்களுடைய கைகுட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது சிலதுளிகள் தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஓர் நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதினினும் பதின்மடங்கு சுகத்தை இந்த அத்தர்களால் மகிழ்வீர்களென்பது திண்ணம். கிரயம் புட்டி 1க்கு அணா 10.



ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

# மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கந்தாணி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோமங்கள் முழுதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும், வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகாது. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

## சோடா வாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதவர்களுக்கும் து நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 8-கிட்டிகை சோடாவாட்டர் பவுடர் பாட்டால் பொசபொசவென்று பொங்கும். உடனே சாப்பிடவும் ஏப்பம் நும். உடனே வயிற்றுநோயை நிறுத்தும். புட்டி 1-க்கு அணா 0 6 0.




## யூகலிப்டஸ் ஆயில்
### (சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் தேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக் வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு வெட்டு காயங்கள், ரம்பு சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இன்புளு வென்ஸா, மலேரியா, சகலவித ஜுரங்கள், இருமல், கக்குவா இருமல், வாய்வு, பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4
1 ,, 1-டஜன் (12) ரூ. 2 8 0

## நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன் இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்கு கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்ட்பிகேட்டை கணக்கிட முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்து வரும் ரூ. 1.

## கூந்தல் வளரும் துளிகள்.



இதை நல்லெண்ணெய் அல்லது தேங்கா யெண்ணையில்கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம்விழுதுபோல் உண்மையாய் வளரும். பேன் சேராது, சுண்டு உண்டாகாது, மயிர் உதிராது, வழுக்கையான இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு அணா 12.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

## நாராயண சஞ்சீவி தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டை குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகளை ஆச்சரியப்படும் விதமாய் கண்டிக்கும். தொடர்ச்சியாய்ச் செய்துவரும் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும் மூளையைக் குளிரப் பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் நிகரற்றது. சாராயசத்து முதலிய ஆங்கில வாசனைகள் ஒன்றும் சேராமல் சுத்தமான இலை கிழங்கு புல் முதலிய இந்திய வாசனையினால் பரிமளிப்பது. தினம் தலையில் தடவி வாரி வருவதினால் மயிர் கருப்புப் பட்டைபோல்பளபளப்பாக கருத்து ஆலம் விழுதுபோல் நீண்டு வளருவதோடு உஷ்ணத்தை தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி காலையில் எழுந்திருக்கும்போது தேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## ஜி. கியூர் வெள்விளா என்னும்
### கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியானரோடும் சம்பந்தப்படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினிகொண்டு தாது கெட்டு பிரமியங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, புவுத்திர முதலியவைகள் உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய ரத்தப் பிரமியம், நீர்கடுப்பு, நீர்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. பேதி முதலிய கெட்ட குணங்கள் கிடையாது. பத்தியமில்லை. உபயோகிக்கும் விதம் மருந்துடன் வரும். புட்டி 1-க்கு ரூபா 1

## பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.


விலை  ரூ. 2—0

பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

# அயத்தங்க் திராவகம்.

**அநுபவமானது! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!!**



மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவதுவேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கிபலவிர்த்திதருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் தீரக்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும், நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலக்கடுப்பு மூலவாய்வு மலச்சிக்கல் இவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது, தேகம் வஜ்ஜிரமேயாகும்: இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூ. 1 12 0.

# சிவப்பிரகாச பல் பொடி.

இந்த சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல் பொடிகளைப்போலிராமல் அதிக சுகந்தமாயும் பல் ... பல்லில் சொத்தை, ஈர் வளர்ந்திருத்தல், வாய் ... நாற்றம், பல்லாட்டம் முதலியவியாதிகளை ... துனது மல்லாமல் பல் நன்றாய் துலங்கும்படிச் செய்யும், வாய்க்கு சதா கமகமவென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா - 2. 6-டப்பி விலை அணா 10.

## ... நாசமாக்கும் பில்லைகள்.

இந்த பில்லையில் ஒரு வருடத்து குழந்தைகட்கு அரை பில்லையும் மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லை வீதம் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

---

**விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**